விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 24
ஒலி 117 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 02 சனிக்கிழமை (15.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வெயிலில் செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்

### பொதுமக்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் அதிகளவான வெப்பநிலை நிலவி வருவதனால் வெயில் நேரங்களில் பொதுமக்கள் வெளியிடங்களுக்கு செல்வதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல்திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அதிக நேரம் பொது இடங்களில் வெயிலில் இருப்பதை தவிர்த்துக் 15

## வெளிப்படைத் தன்மையுடன் பணியாற்ற தயாராகவுள்ளோம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடன் வழங்குபவர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் வெளிப்படைத்தன்மையுடன் பணியாற்ற தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பான தமது திட்டத்தை அறிவிப்பதற்காக ஜப்பான், பிரான்ஸ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் ஜூம் தொழில்நுட்பத்தின் ஊடாக நடாத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதி 15

## நெருக்கடி நேரத்தில்

# இலங்கைக்கு தொடர்ந்து இந்தியா ஒத்துழைக்கும்

### இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்



(டில்லி)

இலங்கை நெருக்கடியைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் இந்தியா எப்போதும் தனது ஒத்துழைப்பை வழங்கும் என இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உயர்மட்ட சந்திப்பில் கலந்து கொண்டபோது, இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் அனைத்து 15

## நாடு முழுவதும் சோதனை

(கொழும்பு)

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கண்டு பிடிக்க நாடளாவிய ரீதியில் தொடர்ந்து சோதனைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் 15

### புத்தாண்டு வாழ்த்தில்

## தமிழ் மொழி நிராகரிப்பு




15

### இலங்கைக்கான கடன் பேச்சுவார்த்தையில்

## அனைத்து கடன் வழங்குநர்களும் இணைந்து கொள்ள முடியும்

### ஜப்பானிய நிதி அமைச்சர்



(கொழும்பு)

இலங்கைக்கான கடன் பேச்சுவார்த்தை நடைமுறையில் அனைத்து கடன் வழங்குநர்களும் இணைந்துகொள்ள முடியும் என ஜப்பானிய நிதி அமைச்சர் ஷூனிச்சி சுஸூகி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் 15

## யாழ்.பண்ணையில் நாகபூசணி அம்மன்

### உருத்திரசேனையால் பிரதிஷ்டை



(யாழ்ப்பாணம்)

தீவகத்தின் நுழைவாயிலாக இருக்கும் யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் நாகபூசணி அம்மனின் திருவுருவம் தமிழ்ப் புத்தாண்டு தினமான நேற்று அதிகாலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

உருத்திரசேனை என்ற 15

### கீரிமலை கடற்கரையில்

## நாவலரின் சிலை திறப்பு



(யாழ்ப்பாணம்)

சிவபூமி அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் வலி வடக்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை கடற்கரையில் 15

## ரணில் அரசுக்கு எதிராக ஒன்றாக எழுவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

ரணில் அரசாங்கத்துக்கு எதிராக அனைவரையும் ஒன்றாக போராட வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத் 15

## பொருளாதார ஒத்துழைப்பை இலங்கைக்கு தொடர்ந்து வழங்குவோம்

சீன அரசாங்கம் தெரிவிப்பு

05ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய தொழிற் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சிநெறிகள் க.பொ.த (உயர்தரம்) சித்தியடையாதோர் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழிற் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**Field Assistant Agriculture** (விவசாய உதவியாளர் பயிற்சிநெறிகள்)

1. தேசிய தொழிற் தகைமை மட்டம் 3 (4 மாத காலப்பயிற்சி நெறி) தகைமை - க.பொ.த சாதாரண தரம் கற்றிருப்பதுடன் 16-24 வயதிற்குட்பட்டவராக இருத்தல்.
2. தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (6 மாத காலப்பயிற்சி நெறி) தகைமை - NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமான விவசாய பாடத்திலும் சித்தியடைந்திருப்பதுடன் 16 - 24 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்

**பயிற்சிக் கட்டணம் இலவசம்**

பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 17.04.2023 அன்று காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தகைமை சான்றிதழ்கள் கிராமசேவையாளரின் நற்சான்றிதழ் மற்றும் வேறு இரு நற்சான்றிதழ்களுடன் தற்போது உள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நேரில் சமுகமளிக்கவும்

*மேலதிக விபரங்கள்*

**அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்**
**மருதனார்மடம்**
**சுன்னாகம்.**

**தொலைபேசி :- 021 224 1420**
**மின்னஞ்சல்** :- jcinstituteofagriculture@gmail.com (C-6361)


## புத்தாண்டு கொண்டாடிய மகிந்த குடும்பம்



தமிழ்-சிங்கள புத்தாண்டு நேற்றையதினம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடப்பட்டது.

இந்நிலையில் அரசியல் தலைவர்களும் நேற்றையதினம் தமது இல்லங்களில் குடும்பத்தினருடன் இணைந்து புதுவருட கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறானதொரு நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வீட்டிலும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றதுடன் அது தொடர்பான புகைப்படங் களும் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. (ம-7.9)

## இலங்கையில் குவியும் இந்திய முட்டைகள்

இந்தியாவில் இருந்து மேலும் ஒரு மில்லியன் முட்டைகள் நேற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த முட்டைகள் நேற்றய தினம் பிற்பகல் வேளையில் நாட்டை வந்தடைந்தன என அரச வர்த்தக பல்வேறு சட்ட ரீதியான கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கடைசி முட்டை இருப்புக்கான அனுமதியை வழங்கியது.

பேக்கரி உற்பத்தி நிறுவனங்களுக்கு முட்டைகளை விநியோகிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இதுவரை இந்தியாவில் இருந்து 4 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் 5 மில்லியன் முட்டைகளுக்கு முன்பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7.9)

## துப்பாக்கி சூடு ஒருவர் பலி

இலங்கையின் தென் பகுதி காலி -அவுங்கல்ல மித்தரமுல்ல பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.


உந்துருளியில் வந்த இனந்தெரியாத இருவரால் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த 29 வயதானவர் பலப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7,9)


- **உங்கள் கனவு இல்லம் ஒன்றை அமைப்பதற்கு யாழ்நகருக்கு அருகாமையில் காணி ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.**
- **உங்கள் முதலீட்டை அசையாச்சொத்து ஒன்றின் மூலம் பெறுமதியானதாக்கிக் கொள்ள உடனே முந்துங்கள்.**

# காணி விற்பனைக்கு உண்டு

**பலாலி வீதி, கோண்டாவில்.**





- 54 பரப்பு காணி தேவைக்கேற்ப பாகங்களாக பிரித்துக்கொடுக்கப்படவுள்ளது (18அடி பாதை வசதி உண்டு)
- நல்ல குடிநீர், சிறந்த சமூகச்சூழலுடன் கூடிய செம்மண் விவசாய குடியிருப்பு நிலம்.
- திருநெல்வேலி சந்தை, மருதனார்மடம் சந்தை மற்றும் பெற்றோல் நிலையம், K.K.S Road பலாலி வீதி railway station, பிரபல திருமண மண்டபங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மிக அருகாமையில் உள்ளது.
- சொத்துக்கள் முறையாக பராமரிக்கப்பட்டு ஆவணங்கள் தெளிவாக உள்ளன.
- ஆயுள் கால உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளுங்கள்.

**077 2757484**
**077 1048865**

(15256)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சித்திரைப் புத்தாண்டு பிறப்பையொட்டி ஆலயங்களில் விஷேட அபிஷேக ஆராதனைகள்





(யாழ்ப்பாணம்)

தமிழ் சித்திரைப் புத் தாண்டு பிறப்பினைமுன்னிட்டு நேற்று யாழ்.மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களிலே விஷேட அபி ஷேக ஆராதனைகள் சிறப்பாக இடம்பெற்றன. இதனை முன் னிட்டு நல்லூர் கந்தசுவாமி ஆல யத்திலும் வண்ணை ய ம்பதி வேங்கட வரதராஜப் பெரு மாள் ஆலயம் மற்றும் நயினா தீவு நாகபூசணி அம்மன் ஆல் யத்தி லும் சோபகிருது வருடப்பிற ப்பை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (நி)

## சஜித்திற்கு பிரதமர் பதவி; பச்சைக் கொடி காட்டினார் ரணில்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித்திற்கு பிரதமர் பதவி வழங்கத் தயார் என ஜனாதிபதி கூறி யுள்ளதாக தெற்கு ஊடக மொன்று செய்தி வெளியிட்டு ள்ளது.

சிறுபான்மை கட்சிக ளுடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பின் போது இந்த விடயம் கூறப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகி ன்றது.

தற்போதைய அரசாங் கத்திற்கு எந்த நேரத்திலும் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என சிறுபான்மை கட்சிகள் உறுதியளித்து ள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

தனித் தனி நபர்களா கவோ, தனிக்கட்சிகளாவோ அன்றி சஜித் தலைமையி லான ஒட்டுமொத்த ஐக்கிய மக்கள் சக்தியும் அரசாங்கத் திற்கு ஆதர வளிப்பதே பொருத் தமானது என ஜனாதிபதி தெரி வித்துள்ளார்.



ஜனாதிபதி சஜித்திற்கு பிரத மர் பதவி வழங்க விரும்பும் விடயத்தை மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகி யோர் சஜித் பிரேமதாஸவிடம் தெரிவித்துள்ளதாக சிங்கள வானொலியென்றும் செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

## நேரடி வர்த்தகத்தில் ஈடுபடுவோர் பதிவு செய்யக் கோரி வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

நேரடி வர்த்தகத்தில் ஈடு படும் நபர்கள் மற்றும் நிறு வனங்கள் நுகர்வோர் விவகார அதிகார சபையில் பதிவு செய்ய வேண்டும் என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு ள்ளது.

குறித்த வர்த்தமானி அறி வித்தல் நேற்று முன்தினம் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த நிரியெல்லவின் கையொப்பத் துடன் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சூரிய ஒளி அமைப்புகள், தொலைபேசிகள் மற்றும் பாக ங்கள், தளபாடங்கள், துப்புரவு முகவர்கள், காலணிகள், எழுது பொருட்கள், சமையலறை பாத் திரங்கள் மற்றும் பாகங்கள், படுக்கை விரிப்புகள், மெத்தை கள் மற்றும் ஆயத்த ஆடை களை விற்கும் அனைத்து நேரடி விற்பனையாளர்களும் நுகர்வோர் விவகார அதிகார சபையில் பதிவு செய்ய வேண் டும் என குறிப்பிடப்பட்டு ள்ளது. (நி)

## பட்டாசுக் கடையில் பாரிய தீ விபத்து

(கொழும்பு)

கிரியுல்ல பிரதேசத்தில் தற்காலிகமாக நிர்மாணிக் கப்பட்ட பட்டாசுக் கடை ஒன் றில் தீ பரவியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு தீ பரவியதாகவும், கிரியுல்ல பொலிஸார் மற்றும் பிர தேசவாசிகளின் தலையீட்டி னால் தீ அணைக்கப்பட்ட தாகவும் பொலிஸ் தலை மையகம் தெரிவித்துள் ளது.

தீ விபத்தால் கடையில் இருந்த பட்டாசுகள் அனை த்தும் எரிந்து நாசமாகின.

இந்த தீ விபத்தில் இரு புறமும் உள்ள இரண்டு கடைகளின் சொத்துக்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்தில் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்பட வில்லை என்பதுடன், சம்ப வம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரியு ல்ல பொலிஸார் மேற்கொ ண்டு வருகின்றனர். (நி)

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்படும்

### மஹிந்த தேசப்பிரிய நம்பிக்கை

(கொழும்பு)

சர்வதேச இளைஞர் தினம் அல்லது உலக ஜனநாயக தின த்தில உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்த்துள்ளதாக முன் னாள் தேர்தல் ஆணையா ளர்கள் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நாளிதழ் ஒன்றிற்கு வழங் கிய செவ்வியிலேயே குறித்த விடயத்தை அவர் தெரிவித்து ள்ளார்.

உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய அறிக்கை யின் இறுதி வரைவு கைய ளிக்கப்பட்டுள்ளதாகவும், தற் போதுள்ள பல உள்ளூராட்சி மன்றங்களின் பிரதேச எல் லைகள் மாற்றப்பட்டுள்ளதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாற்றங்கள் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்த லில் எந்த வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாராளுமன்ற சட்டத்தின் ஊடாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படுமாயின் தற்போதுள்ள நிலைமையில் மாற்றம் ஏற்படுவதற்கான சாத் தியக்கூறுகள் காணப்படுவதாக வும் அவர் சுட்டிக் காட்டியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## புகையிரதத்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதான புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதத்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு புகையிரத நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கருவப்பங்கே ணியைச் சேர்ந்த இராசநாயகம் ரமேஸ்குமார் என்னும் 45 வயதுடைய நபரே உயிரிழந்து ள்ளதாக மட்டக்களப்பு பொலி ஸார் தெரிவித்தனர். (நி)

## ஊடகங்களை கட்டுப்படுத்தும் சட்டங்களுக்கு ஆதரவு வழங்க மாட்டோம்-மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

ஊடகங்களைக் கட்டு ப்படுத்தும் எந்தவொரு சட்ட த்துக்கும் நாம் ஆதரவு வழங்க மாட்டோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரி பால சிறிசேன தெரிவித் தார்.



தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்க ளைக் கட்டுப்படுத்துவதற் குப் புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜ பக்ச தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் மைத் திரிபால சிறிசேன ஊடக ங்களிடம் கருத்துரைக் கும் போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,


தொலைக்காட்சிகள், வானொலிகள் மற்றும் சமூக ஊடகங்கள் சுதந் திரமாக இயங்க வேண் டும். ஊடக சுதந்திரத் தைப் புதிய சட்டம் மூலம் அரசு தட்டிப் பறிக்க முடி யாது.

ஊடகங்களின் விமர் சனங்களுக்கு இந்த அரசு ஏன் அஞ்சுகின்றது? எமது நல்லாட்சி அரசையும் சில ஊடகங்கள் சகட்டுமேனிக்கு விமர்சித்தன.

அதை நாம் எதிர் கொண்டோம். விமர்சன ங்களை எதிர்கொள்ள அவற்றுக்குத் தகுந்த பதில் வழங்க அரசுக்கு முது கெலும்பு இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில் பச்சை நிற ஜெர்சியில் களமிறங்கும் ஆர்.சி.பி




16 ஆவது ஐ.பி.எல் சீசனுக்கான கிரிக்கெட் திருவிழா விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு போட்டியும் இரசிகர்களை சீட்டின் நுனிக்கே சென்று அமர்ந்து பார்க்கும் நிலையில் உள்ளது.

ஐ.பி.எல் இல் இதுவரை சம்பியன் பட்டம் வெல்லாத ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, இந்த முறை கிண்ணத்தை வெல்ல தீவிரம் காட்டி வருகிறது. அந்த அணியில், அதிரடி வீரர்களான டு பிளஸ்சிஸ், கோலி, மேக்ஸ்வெல், தினேஷ் கார்த்திக் போன்ற வீரர்கள் உள்ளனர்.


இந்த நிலையில், வரும் 23 ஆம் திகதி பெங்களூரில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள போட்டியில் பெங்களூர் அணி பச்சை நிற ஜெர்சியில் களமிறங்க உள்ளது.

இந்த தகவலை அந்த அணி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது. மேலும், அதில், எங்களின் இந்த சிறப்பான பச்சை நிற ஜெர்சிகள் 100 சதவீதம் மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களால் செய்யப்பட்டவை என்றும் தெரிவித்துள்ளது.

2011 முதலே ஆர்சிபி "கோ க்ரீன்" என்ற கலாசார முன்னெடுப்பை நிகழ்த்தி வருகிறது.

இதன் மூலமாக வருங்கால தலைமுறையினருக்கு தூய்மையான மற்றும் பசுமையான சூழ்நிலையை உருவாக்குவதற்கான விழிப்புணர்வை தருகிறது. (6)

# சாம்சனுக்கு அபராதம்



ஐ.பி.எல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகளுக்கு இடையேயான லீக் போட்டி கடந்த புதன்கிழமை சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் ராஜஸ்தான் அணி த்ரில் வெற்றியை பெற்ற போதிலும், குறித்த நேரத்தில் பந்து வீசாமல் தாமதப்படுத்தியதாக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல் நடத்தை விதிமுறைகளை மீறும் விதமாக ராஜஸ்தான் ராயல்ஸ் அணி முதல் முறையாக ஈடுபட்டுள்ளதால், அந்த அணியின் கப்டன் சஞ்சு சாம்சனுக்கு ரூ.12 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தாமதமாக பந்து வீசியதாக ஆர்சிபி கப்டன் டு பிளிசிஸ்க்கு ரூ.12 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (6)

# மான்டே சார்லோ டென்னிஸ்; ரூப்லெவ் காலிறுதிக்கு தகுதி



மான்டே கார்லோ மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டி மொனாக்கோவில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த 3 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் ஆந்த்ரே ரூப்லெவ் 7-6 (7-4), 6-2 என்ற நேர் செட்டில் சக நாட்டவர் கச்சனோவை தோற்கடித்து கால்இறுதிக்கு முன்னேறினார்.

தரவரிசையில் 3 ஆவது இடம் வகிக்கும் கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் தன்னை எதிர்த்த நிகோலஸ் ஜாரியை (சிலி) 6-3, 6-4 என்ற நேர் செட்டில் வீழ்த்தி கால்இறுதியை எட்டினார். ஜன் லினர்ட் ஸ்ரப் (ஜேர்மனி), ஹோல்ஜர் ருனே (டென்மார்க்), ஜானிக் சின்னெர் (இத்தாலி) ஆகியோரும் தங்களது ஆட்டங்களில் வெற்றி பெற்றனர். (நி)

# சென்னை அணி வீரர் சிசண்டாமகலா அடுத்த மூன்று போட்டிகளில் விளையாட மாட்டார்



சென்னை அணியின் கப்டன் டோனியின் முழங்கால் காயம், அவருக்கு தொல்லையாக இருப்பதாக சென்னை அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளெமிங் கூறியுள்ளார்.

சென்னை - ராஜஸ்தான் அணிகளுக்கு இடையேயான போட்டிக்கு பின் செய்தியாளர்களை சந்தித்த பிளேமிங் கூறியதாவது.

டோனி முழங்கால் காயத்திலிருந்து குணமடைந்து வருவதாகவும் அந்த காயம் அவருக்கு ஏதாவது ஒரு வகையில் தொல்லையாக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

மேலும் நேற்றைய போட்டியின் போது காயமடைந்த சிசண்டாமகலா, அடுத்த இரண்டு வாரங்களுக்கு விளையாட மாட்டார் எனவும் பிளெமிங் கூறினார்.

இதனால் சிசண்டாமகலா சென்னை அணியின் அடுத்த 3 போட்டிகளில் விளையாடமாட்டார் எனத் தெரிகிறது.

சென்னை அணி அடுத்த போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியைச் சந்திக்கிறது. இந்த போட்டி நாளை மறுதினம் சின்னசாமி ஸ்டேடியத்தில் நடைபெறுகிறது. (6)

# சென்னை அணியை 10 ஆண்டுகள் கழித்து சேப்பாக்கத்தில் வைத்து வீழ்த்தியுள்ளோம்-சங்கா




சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை சேப்பாக்கம் மைதானத்தில் வீழ்த்தி மிகப் பெரிய சாதனை படைத்துள்ளதாக, ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் பயிற்சியாளர் குமார் சங்ககாரா தெரிவித்துள்ளார்.

சேப்பாக்கம் மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடந்த ஐ.பி.எல் போட்டியில், ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இதன்மூலம் புள்ளிப்பட்டியலில் ராஜஸ்தான் அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதுவரை நான்கு போட்டிகளில் விளையாடியுள்ள ராஜஸ்தான் அணி 3 வெற்றிகள் மற்றும் ஒரு தோல்வியை சந்தித்துள்ளது.

வெற்றிக்கு பின்னர் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் பயிற்சியாளர் குமார் சங்ககாரா தமது வீரர்களை பாராட்டிய வீடியோவை அணி நிர்வாகம் பகிர்ந்துள்ளது.

அதில் குமார் சங்ககாரா கூறுகையில், "மிகப்பெரிய வெற்றியை பெற்றுள்ளோம். சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை சேப்பாக்கத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி வீழ்த்தியிருந்தது. அதன் பின்னர் 10 ஆண்டுகள் கழித்து நாம் தான் வீழ்த்தியுள்ளோம். இது சாதனை வெற்றி.

பனிப்பொழிவு சூழலில் இவ்வாறு வெற்றி பெறுவது எளிதான விடயம் அல்ல என தெரிவித்துள்ளார். (6)

# இலங்கை றக்பி நிறுவனம் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கம்

இலங்கை றக்பி நிறுவனம் மீது விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடையை நேற்று முன்தினம் நீக்கிய ஆசிய றக்பி, இலங்கை றக்பிக்கு மீண்டும் பூரண உறுப்புரிமை வழங்குவதாக அறிவித்தது.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டதை விளையாட்டுத் துறை அமைச்சு உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியது.

இதனைக் கருத்தில் கொண்டே ஸ்ரீலங்கா றக்பியை ஆசிய றக்பியின் முழு அங்கத்துவமாக மீண்டும் நிலைநிறுத்துவதற்கு ஆசிய றக்பி தீர்மானித்ததாக அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நண்பர்களுடன் நீராடச் சென்ற மாணவன் சடலமாக மீட்பு

(கொழும்பு)

நீராடச் சென்றிருந்த வேளையில், நேற்று முன்தினம் பிற்பகல் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன பாடசாலை மாணவனின் சடலம் நேற்று அக்குரலை கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொட தர்மசோக வித்தியாலயத்தில் 11 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் 17 வயதுடைய பாடசாலை மாணவனான எச்.பி.சஞ்சன என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதே வயதுடைய மேலும் இரு மாணவர்களுடன் கடலில் நீராடிக் கொண்டிருந்த வேளையில், மூவரும் கடலில் அடித்துச் செல்லப்பட்டதுடன், ஏனைய இருவரையும் பிரதேசவாசிகள் காப்பாற்றியுள்ளனர்.

புத்தாண்டு விடுமுறை காரணமாக நண்பர் ஒருவரின் வீட்டிற்கு செல்வதாக வீடுகளுக்கு தெரிவித்துவிட்டு இந்த மூன்று மாணவர்களும் கடலில் குளிக்கச் சென்று கொண்டிருந்த போது திடீரென ஏற்பட்ட அலையில் அடித்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# இலங்கையின் கடன் நிவாரண பேச்சுவார்த்தைகளில் தலையிடப் போவதில்லை ஐ.எம்.எப்

(வோஷிங்டன்)




இலங்கையின் கடன் நிவாரண பேச்சுவார்த்தைகளில் தலையிடப் போவதில்லை என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.


2023 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டுக்குள் இலங்கை செலுத்த வேண்டிய 17 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி இடைவெளியுடன், மொத்தமாக 24 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி இடைவெளியை இலங்கையின் கடன் நிவாரண செயற்பாடு நிரப்பும் என எதிர்பார்ப்பதாக, சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய, பசுபிக் பிராந்திய பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கை மற்றும் அதன் கடன் வழங்குநர்களிடையே இடம்பெறும் பேச்சுவார்த்தைகளுக்கமைய, கடன் நிவாரண நிபந்தனைகளின் அடிப்படையில் கடன் மறுசீரமைப்பு இடம்பெறும் விதம் மாறுபடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இந்த விடயங்களில் சர்வதேச நாணய நிதியம் தலையிடப் போவதில்லை என நிதியத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் கூறியுள்ளார். (நி)

# இலங்கையில் சீர்திருத்த வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க வேண்டும் என உலக வங்கி அழைப்பு

(கொழும்பு)



இலங்கையில் சீர்திருத்தங்கள் வெற்றிபெற வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க வேண்டும் என உலக வங்கி அழைப்பு விடுத்துள்ளது.

உலக வங்கியின் தெற்காசியாவிற்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் வோஷிங்டனில் ஆக்கபூர்வமான சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் நிதி மற்றும் பொருளாதார நிர்வாக சீர்திருத்தங்களில் முன்னேற்றம் கண்டு மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் முழு மீட்பு முயற்சிகள் வளர்ச்சியடைய வேண்டும். அவற்றை உலக வங்கிகுழு ஆதரிக்கும் என்றும் உலக வங்கியின் தெற்காசியாவிற்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் தெரிவித்தார்.

மேலும், பாதிக்கப்படக்கூடிய மக்களை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட முக்கியமான சமூகப் பாதுகாப்பு சீர்திருத்தம் உட்பட, சீர்திருத்தங்கள் வெற்றிபெற அதிகரித்த வெளிப்படைத்தன்மை முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் கலந்து கொண்டுள்ளார். (நி)

# பொருளாதார ஒத்துழைப்பை தொடர்ந்து இலங்கைக்கு வழங்குவதாக சீனா உறுதி

(வோஷிங்டன்)

இலங்கைக்கு நிதி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை தொடர்ந்து வழங்க தயாராக உள்ளதாக சீனா உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கான சீன தூதரகம் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இதனை தெரிவித்துள்ளது.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வசந்தகால கூட்டத்தொடரின் ஒரு பகுதியாக, சீன அமைச்சர் வேங் டொங்வேயும், இலங்கையின் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, இலங்கைக்கான ஒத்துழைப்பை சீனா மீள உறுதிப்படுத்தியுள்ளது.

இதனிடையே, சீன அமைச்சர் வேங் டொங் வேய் உடனான சந்திப்பு பயனுள்ளதாக அமைந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தமது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

கடன் சுமை, பொருளாதார அபிவிருத்தி ஆகியன தொடர்பில் தீர்வினை எட்டுவதற்கு இலங்கை மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கான ஆதரவை சீனா இதன்போது உறுதிப்படுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

15.04.2023
சித்திரை 02, சனிக்கிழமை
தசமி முன்னிரவு 7.46 மணிவரை

திருவோணம் காலை 6.33 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 4.55
சுபநேரம் 3.04-4.34 மணிவரை
இராகு காலம் 9.04-10.34 மணிவரை

சந்திராஷ்டமம்- புனர்பூசம்

வளவன்

**மேஷம்:** எந்தக் காரியத்தையும் எடுத்தோம் முடித்தோம் என செய்து முடிப்பீர்கள், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், உற்சாகமான நாள்.

**கடகம்:** எளிதில் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.

**மகரம்:** திடீர் பயணங்கள் செல்லும் எண்ணம் உருவாகும், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்:** சுப காரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.

**சிம்மம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**விருச்சிகம்:** விருந்தினர்களின் சந்திப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கும்பம்:** குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சுப விரயங்கள் ஏற்படலாம், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** நிதானத்துடன் நடந்து நிம்மதி காணும் நாள், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**கன்னி:** பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிள்ளைகள் வழியில் சுப நிகழ்வுகளை நடத்தும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு, வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரைச் சீர்திருத்தும் கடமையைவிட தன்னைச் சீர் திருத்துவதே முதற்கடமை.



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நேற்று சோபகிருது வருடப்பிறப்பு அன்று தேர்த்திருவிழா பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)

# நீண்டகாலத்தின் பின்னர் யாழில் பெண்ணொருவருக்கு கொரோனா தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலத்தின் பின்னர் பருத்தித்துறையைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் யாழ். போதனா மருத்துவமனை விடுதி ஒன்றில் அவரை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சியாக 3 வாரங்களுக்கு மேலாக காய்ச்சலால் அவதிப்பட்ட பெண் ஒருவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கிருந்து அவர் கடந்த புதன்கிழமை யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இப்பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதாக யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.ஜமுனானந்தா தெரிவித்தார்.

இதேவேளை, யாழ். போதனாவில் மருத்துவமனையில் கொவிட் நோயாளிகளைத் தனிமைப்படுத்தும் விடுதிகள் தற்போது இல்லை.

கொவிட் தொற்று உச்சத்தில் இருந்த போது அமைக்கப்பட்ட விடுதிகள் தொற்று நோய் குறைந்த பின்னர் அகற்றப்பட்டு விட்டன. இந்நிலையில் தற்போது கண்டறியப்பட்ட நோயாளி விடுதி ஒன்றிலேயே தனிமைப் படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# "வீரகத்தி விநாயகன்" இசைப்பேழை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் கு.வீராவின் "வீரகத்தி விநாயகன்" இசைப் பேழை வெளியீட்டுவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில் கோபுரவாயிலில் கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில் பரிபாலன சபைத் தலைவர் செ.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ இ.புஸ்பராசா குருக்கள், யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், வடமாகாண சபை பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் இராஜமல்லிகை சிவசுந்தர சர்மா மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

# அன்னை பூபதியின் நினைவேந்தல் யாழ். பல்கலையில் முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் உண்ணாவிரத அறப்போராட்டத்தின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தலின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழகத்தில் பல்கலை மாணவர்களால் உணர்வு பூர்வமாக நினைவேந்தப்பட்டது.

யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற நினைவேந்தலில் பல்கலை மாணவர்களால் மலரஞ்சலி மற்றும் ஒருநிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(6)

# சங்கத்தானை அம்மன் ஆலயத்தில் நகை திருடிய இருவர் கைது

## திருடிய நகைகளும் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானைப் பகுதியில் அமைந்துள்ள அம்மன் ஆலயம் ஒன்றில் இருந்து நகை திருடிய குற்றச்சாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை ஆலயமொன்றின் பூசகர் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒன்பதாம் திகதி மேற்படி ஆலயத்திற்கு வந்த சந்தேகநபரான பிறிதொரு ஆலயத்தின் பூசகர் ஆலயத்தில் எழுந்தருளியிருந்த அம்மன் சிலையில் காணப்பட்ட தங்கச் சங்கிலி, தாலி மற்றும் பொட்டுத் தாலி ஆகியவற்றை கொள்ளையிட்டுக் கொண்டு தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ஜெயரூபன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேகநபரான பூசகரையும் அவருடைய உதவியாளரையும் கைது செய்துள்ளனர்.

திருடப்பட்ட நகைகள் துன்னாலை பகுதியில் உள்ள ஒருவருக்கு விற்கப்பட்டிருந்த நிலையில் திருட்டு நகைகளும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# கால்நடைகள் திருட்டு தென்மராட்சியில் அதிகரிப்பு

## கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

அண்மைக்காலமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் கால்நடைத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் கால்நடைகளை பறிகொடுத்த பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களில் அவற்றைத் தேடி அலையும் நிலையும் காணப்படுகிறது.

அண்மையில் சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச்சேரி மற்றும் மீசாலைப் பகுதிகளில் வைத்து இரண்டு கனரக வாகனங்களில் கடத்திச் செல்லப்பட்ட நூற்றுக்கணக்கான கால்நடைகளை மீட்டிருந்தனர்.

இந்நிலையில் கால்நடைகளை பறிகொடுத்த தென்மராட்சி மக்கள் மீட்கப்பட்டவை தமது கால்நடைகளாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தில் பொலிஸ் நிலையங்களில் திருடப்பட்ட தமது கால்நடைகளைத் தேடி அலைகின்ற நிலை காணப்படுகிறது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் கருத்து தெரிவிக்கையில் தென்மராட்சியின் வரணி, மிருசுவில், சரசாலை, அல்லாரை, நாவற்குழி உள்ளிட்ட கிராமங்களில் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் கால்நடைகள் திருடப்பட்டு வெளிப் பிரதேசங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

சில கால்நடைகளை உயிருடனும் சிலவற்றை காட்டுப் பகுதிகளில் வைத்து இறைச்சியடித்தும் கொண்டு செல்கின்றனர். இரவு வேளைகளில் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்து வாகனங்களை சோதனை செய்தால் கால்நடைத் திருட்டுச் சம்பவத்தை கட்டுப்படுத்த முடியும்.

நாளுக்கு நாள் எமது கால்நடைகளை பறிகொடுப்பதனால் வாழ்வாதார ரீதியாக வெகுவாக பாதிக்கப்படுகிறோம் என மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர். (6-30)

# உணவகங்களில் உணவின் தரம் குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும்

## யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்பகுதியில் உள்ள உணவுச்சாலை உரிமையாளர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பிராந்திய வைத்திய அதிகாரிகளிடம் உணவின் தரம் குறித்தும் தொழில் முறை சான்றிதழ்கள் பயிற்சிகள் இல்லாமல் உள்ள உணவக ஊழியர்கள் குறித்தும் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடப்பட்டது..

நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே யாழ். அரச அதிபர் அ.சிவபாலசுந்தரம் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் தனக்கு உணவின் தரம் குறித்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய குறித்த கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

ஏனைய மாவட்டங்களிடையே ஒப்பிடுகையில் யாழில் உணவுச்சாலைகளின் தரம் குறைவாக உள்ளது. இங்கிருந்து தம்புள்ளை நோக்கி பல வகையான மரக்கறிவகைகள் ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும் இங்குள்ள உணவகங்களில் அவற்றுக்கு பதிலாக கடலை, சோயா போன்றவற்றையே உணவுச்சாலைகளில் கறிக்குப் பயன்படுத்துகின்றனர்.

மேலும் உணவகங்களில் வேலையில் ஈடுபடும் ஊழியர்கள் தொழில் முறையான பயிற்சி இல்லாமலும் மற்றும் சான்றிதழ்கள் இல்லாமல் பணியில் உணவக உரிமையாளர்கள் வியாபார நோக்கில் ஈடுபடுத்தியுள்ளனர்.

இரண்டு வாரங்களுக்குள் குறித்த விடயம் தொடர்பில் உணவுச்சாலை உரிமையாளர்கள் நிவர்த்தி செய்ய வேண்டும். அதன் பிறகு சட்டம் வலுமையாக்கப்படும் என தெரிவித்தார். (நி-6)

# யாழில் இருந்து வெளிநாடுகளுக்கு வாழைப்பழங்கள் ஏற்றுமதி

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் விவசாய நவீனமயமாக்கத் திட்டத்தினூடாக ஏப்ரல் மாத இறுதி அல்லது மே மாத ஆரம்பத்தில் யாழில் இருந்து வெளிநாடுகளுக்கான கதலி வாழைப்பழ ஏற்றுமதி திட்டம் ஆரம்பமாகவுள்ளது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் அனர்த்தங்கள் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சுகாதார திணைக்களம் கோரிக்கை

(கொழும்பு)

விபத்துக்களை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார திணைக்களம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

வீதிகளில் மற்றும் வீடுகளில் ஏற்படும் அனர்த்தங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பயிற்சியளிக்கும் அதிகாரி புஷ்பா ரம்யானி டி சொய்சா கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சில நாட்களில் ஏற்பட்ட அனர்த்தங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிவேக வீதிகளில் ஏதேனும் விபத்துக்கள் நிகழ்ந்தால் அது தொடர்பில் 1969 என்ற இலக்கத்திற்கு அறியப்படுத்துமாறு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வீ.எஸ் வீரகோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குடிபோதையில் வாகனம் செலுத்துவதை தவிர்க்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் போது பல்வேறு ஆபத்துகளை சந்திக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே, அந்த விளையாட்டுக்களை எச்சரிக்கையுடன் விளையாட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

## மேலும் 76 பேர்

# ஓமான் பாதுகாப்பு இல்லத்தில் தஞ்சம்

(ஓமான்)

ஓமானில் உள்ள பாதுகாப்பு இல்லத்தில் மேலும் 76 இலங்கை பணிப்பெண்கள் தஞ்சமடைந்துள்ளனர். வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொது முகாமையாளருமான காமினி செனரத் யாப்பா இதனைத் தெரிவித்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் 36 பேர் சுற்றுலா விசாவில் ஓமானுக்கு சென்று பணிபுரிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பணியகத்தில் பதிவு செய்யாது, வெளிநாட்டில் தொழில் வாய்ப்புகளுக்காக செல்வோருக்கு, எதிர்வரும் காலத்தில் பாதுகாப்பு இல்லத்தில் தஞ்சம் வழங்காதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாது தொழில் வாய்ப்பிற்கு செல்வது, நாட்டின் சட்டங்களை மீறும் செயலாகும். (நி)

# யாழ்ப்பாணத்திற்கு சென்ற முதல் இந்தியப் பிரதமர் நான் தான்

## இந்தியப் பிரதமர் மோடி பெருமிதம்



(கொழும்பு)

இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்ட முதல் பிரதமர் நான்தான் என இந்திய பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு மத்திய இணை அமைச்சர் முருகனின் டெல்லி இல்லத்தில், தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

"உலகின் பழைமையான மொழி தமிழ் என்பதில் ஒவ்வொரு இந்தியரும் பெருமை கொள்ள வேண்டும். சென்னையிலிருந்து கலிபோர்னியா வரை, மதுரையில் இருந்து மெல்போர்ன் வரை, கோயம்புத்தூரில் இருந்து கேப்டவுன் வரை, சேலத்தில் இருந்து சிங்கப்பூர் வரை என உலகின் எந்த நாட்டுக்குச் சென்றாலும் தமிழர்களை காணலாம். எந்த நாடுகளுக்குச் சென்றாலும், தமிழர்கள் தங்களின் கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களையும் எடுத்துச் செல்கிறார்கள். அதனால்தான் பொங்கலாகட்டும் புத்தாண்டாகட்டும் தமிழ்ப் பண்டிகைகள் உலகம் முழுவதும் கொண்டாப்படுகின்றன.

இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்த முதல் இந்திய பிரதமர் நான்தான். இலங்கையில் உள்ள தமிழர்கள் உதவிக்காகக் காத்திருந்தனர். எங்கள் அரசாங்கம் அவர்களுக்காக நிறைய செய்தது. நான் யாழ்ப்பாணம் சென்றபோது, அங்கு தமிழர்களுக்காக இந்திய அரசால் கட்டப்பட்ட வீடுகள் ஒப்படைக்கப்பட்டன. வீட்டில் நுழையும் முன் பால் காய்ச்சும் பாரம்பரிய சடங்கு, அதில் நானும் கலந்து கொண்டேன். அதன் வீடியோக்கள் தமிழ்நாட்டில் வெளியான போது தமிழ் மக்களிடம் இருந்து நான் நிறைய அன்பை பெற்றேன் என மோடி தெரிவித்தார். (நி)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2808

**சிவகரன்**

தெருவுல தனியா புலம்பிட்டு போற எல்லோரையும் மனநோயாளினு நினைச்சிடாதிங்க



வீட்டுல மனைவி கிட்ட பேச வேண்டியதை ஒத்திகை பாத்திட்டு போற ஆளாகவும் இருக்கலாம்

**நிலானுஜா**

எதிரியை ஒழிக்க முதலில் அவர்களை நமது நண்பர்களாக்குங்கள்



நம்ம கூட சேர்ந்த பிறகு அவன் உருப்படவா போறான்

**நிர்மலன்**

பக்கத்து சீட்ல இருக்கிற குழந்தையை அவங்க அம்மாவுக்கு தெரியாம பயமுறுத்தி விளையாடுறதுல எவ்வளவு ஆனந்தம்



**விஜிதா**

ஹொட்டலில் சாப்பிட்டுட்டு காசு கொடுக்கவில்லை என்றால் மா ஆட்ட சொல்லுற மாதிரி



பேங்க்ல லோன் வாங்கிட்டு பணம் கட்டவில்லை என்றால் பேங்க் வேலை கொடுத்தா நல்லா இருக்கும்

**தனுஷ்காந்**

குழந்தை மைதானத்தில் விளையாடினால் ஆடை மட்டும் மண்ணாகும்



குழந்தை மொபைலில் விளையாடினால் குழந்தையே மண்ணாகும்

**கிரிஷ்**

கடவுளை வேண்டினால் ஆண் குழந்தை பிறக்கும்



ஆனால் கடவுளே வேண்டும் என்றால் தான் பெண் குழந்தை பிறக்கும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்ததை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய தூதரக அதிகாரிகளை அதிரடியாக வெளியேற்றியது நோர்வே

(ஒஸ்லோ)

உளவுத் தகவல்களை சேகரித்த குற்றச்சாட்டுக்காக 15 ரஷ்யத் தூதரக அதிகாரிகளை நோர்வே அரசாங்கம் அதிரடியாக வெளியேற்றியுள்ளது.

உக்ரைன் - ரஷ்யாவுக்கு இடையேயான போர், கடந்தாண்டு பெப்ரவரி மாதம் தொடங்கிய சில நாட்களிலேயே ரஷ்ய தூதர்கள் உளவுத் தகவல்களை சேகரிப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது.

அதன்பேரில் பல நாடுகள் தங்களது நாடுகளில் ரஷ்யத் தூதரக அதிகாரிகளுக்கு தடை விதிக்க தொடங்கின.

மேலும் சில நாடுகள் அவர்களுக்கு கடவுச்சீட்டுக்களை வழங்கவும் மறுத்திருந்தன.

இந்த நிலையில், ரஷ்யாவின் அயல் நாடான நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் அமைந்துள்ள ரஷ்ய தூதரகத்தில் பணிபுரியும் தூதரக அதிகாரிகள் தங்களது நாட்டின் உளவுத்தகவல்களை சேகரிப்பதாக குற்றம் சாட்டப்பட்டது.

இதனை தங்களது நாட்டின் பாதுகாப்புக்கு மிகுந்த அச்சுறுத்தலாக நோர்வே கருதிய நிலையில், குறித்த அதிகாரிகளிடத்தில் விசாரணைகளும் நடத்தப்பட்டன.

இந்த விசாரணையிலும் அவர்களது செயற்பாடுகள் இராஜதந்திர நடவடிக்கைகளுடன் பொருந்தவில்லை என நோர்வே முடிவு செய்துள்ளது.

இதனையடுத்து நோர்வேயில் உள்ள ரஷ்யாவின் தூதரக அதிகாரிகள் 15 பேரை வெளியேற்ற தீர்மானிக்கப்பட்டது.

அதற்கான அதிகாரபூர்வ அறிக்கையை நோர்வே அரசாங்கம் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இது குறித்து கருத்து வெளியிட்ட நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் அன்னிகென் ஹுய்ட்பெல்ட், ரஷ்யாவின் உளவுத்துறை நடவடிக்கைகளின் நோக்கத்தை எதிர்ப்பதற்கும், அதன் மூலம் தேசிய நலன்களை பாதுகாப்பதற்கும் இது ஒரு முக்கியமான நடவடிக்கை ஆகும் எனத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டிலும் இது போல 3 தூதரக அதிகாரிகளை நோர்வே வெளியேற்றியிருந்தது.

நோர்வே அரசாங்கத்தின் இந்தச் செயலுக்கு ரஷ்யா நிச்சயம் பதிலடி கொடுக்கும் என ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் கூறியதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. (நி)

## டோக்கியோவை இலக்கு வைத்து வடகொரியா ஏவுகணை சோதனை



(டோக்கியோ)

ஜப்பான் டோக்கியோவை இலக்கு வைத்து வடகொரியா தொடர்ந்தும் ஏவுகணை சோதனை நடத்தி வருவதாக ஜப்பான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் டோக்கியோ - ஹொக்கைடோ பகுதியிலுள்ள மக்களை உடனடியாக வெளியேறுமாறு ஜப்பான் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஹொக்கைடோ மாகாணத்தின் அசஹிகவா நகரில், நேற்று முன்தினம் காலை வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதே ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அவுஸ்திரேலியாவின் மேற்கு பகுதிக்கு சிவப்பு எச்சரிக்கை

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் மேற்குப் பகுதிக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் மேற்குப் பகுதியில் கடுமையான புயல் தாக்கம் ஏற்படக்கூடும் என்ற எதிர்வுகூறல் விடுக்கப்பட்டுள்ளமை காரணமாகவே இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த புயலினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பலவீனமான பொருளாதாரம் கொண்ட நாடாக பிரித்தானியா மாறும் -ஐ.எம்.எப்

(வோஷிங்டன்)

உலகின் பணக்கார நாடுகளில் பிரித்தானியா பலவீனமான பொருளாதாரம் கொண்ட நாடாக மாறும் என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

உலகின் பணக்கார பொருளாதாரங்களைக் கொண்ட ஜி -20 நாடுகளில் உள்ள பிரித்தானியாவின் பொருளாதாரம் இந்த ஆண்டு 3 சதவீதம் சுருங்கும் என சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

ஆனால் அடுத்த ஆண்டு பிரித்தானியாவின் பொருளாதாரம் 1 சதவீதம் வளர்ச்சி அடையலாம் என்றும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

## சார்லஸின் முடிசூட்டு விழாவை புறக்கணிக்கும் மேகன்?



(லண்டன்)

பிரித்தானிய இளவரசர் ஹரி தனது மனைவி மேகன் இல்லாமல் மூன்றாம் சார்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் பங்கேற்பார் என பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது.

மேகன் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்ள மாட்டார் எனவும், அவர் தனது இரண்டு குழந்தைகளுடன் கலிபோர்னியாவில் இருப்பார் என்றும் பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் சுமார் 2,000 விருந்தினர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அருகே நிலநடுக்கம்

அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அருகே நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 4.4 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் இந்த நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. (நி)

## அமெரிக்காவின் இரகசிய ஆவணங்களை இணையத்தில் கசிய விட்ட இளைஞன் கைது

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மிகவும் இரகசியமான போர் மற்றும் புலனாய்வு ஆவணங்கள் இணையத்தில் கசிந்தமை தொடர்பில் அமெரிக்க விமானப்படையின் தேசிய காவலர் உறுப்பினரான 21 வயது இளைஞனான ஜக் டெய் செரியா என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஆவணங்கள் கசிய விடப்படும் இணைய சட் குழுவின் தலைவர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவருக்கு எதிராக உளவு சட்டத்தின் கீழ் குற்றச்





சாட்டு சுமத்தப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜக்டெய் செரியாவின் வீட்டில் அதிகாரிகள் அவரை கைது செய்வதை காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024



**சமயோசித புத்தியால் சாதனை நிகழ்த்தும். மேஷ இராசி வாசகர்களே!**

துணிவும் பணிவும் மிக்க உங்களுக்குத் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும் விதத்தில் சோபகிருது புத்தாண்டு அமையப் போகின்றது. புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், வெற்றிகள் ஸ்தானத்தில் வீற்றிருக்கின்றார். உங்கள் இராசியிலேயே ராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். விரய ஸ்தானத்தில் வியாழன், லாப ஸ்தானத்தில் சனி, தன ஸ்தானத்தில் சுக்கிரன் ஆகியவை சொந்த வீட்டில் சஞ்சரித்து ஆண்டின் தொடக்கம் அமைவதால் பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் வியாழன்,

# புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்!

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

22.04.2023 அன்று உங்கள் இராசிக்கு வருகின்றார். இடையில் வக்கிரமும் பெறுகின்றார். சனி பகவான் வருடத் தொடக்கத்தில் கும்ப இராசியில் சஞ்சரிக்கின்றார். இடையில் கும்பத்தில் வக்கிரம் பெறும் அவர், 24.08.2023 இல் வக்கிர இயக்கத்திலேயே மகர இராசிக்குச் செல்கிறார். அங்கிருந்து 20.12.2023 இல் மீண்டும் கும்ப இராசிக்கு சனிப் பெயர்ச்சியாகின்றார். இடையில் சனி-செவ்வாய் பார்வையும் ஏற்படுகின்றது.

முரண்பாடான கிரகங்களின் பார்வை அல்லது சேர்க்கை உருவானால் வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும். அதுபோன்ற நேரங்களில் வரம் தரும் தெய்வ வழிபாடுகளும் அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லும் போக்குமே அமைதிக்கு வித்திடும். 08.10.2023 இல் மீன இராசிக்கு இராகுவும், கன்னி இராசிக்கு கேதுவும் செல்கின்றனர். இந்த மாற்றங்களின் அடிப்படையில் இந்த ஆண்டு முழுவதும் உங்களுக்குப் பலன்கள் அமையும். உங்கள் சுய ஜாதகத்தில் வலிமை வாய்ந்த திசா புத்திகள் நடைபெற்றால் நினைத்த காரியங்கள் நினைத்தபடி நிறைவேறும். உத்தியோகத்தில் இழந்த பதவிகள் மீண்டும் கிடைக்கும். உன்னத வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் விதத்தில் பொருளாதாரம் வந்து சேரும். திசாபுத்தி பலம் இழந்திருந்தால் திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லும். அப்படிப்பட்ட நிலை அமைந்தால் தேர் ஏறிப் பவனிவரும் தெய்வங்களை யோகபலம் பெற்ற நாளில் வழிபட்டால் இன்னல்கள் நீங்கி இன்பம் சேரும்.

### குருப்பெயர்ச்சி

சித்திரை 9 ஆம் திகதி 22.04.2023 அன்று மேஷ இராசிக்கு குரு, பெயர்ச்சியாகின்றார். அப்பொழுது அவரது பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகின்றது. "குரு பார்க்க கோடி நன்மை" என்பதற்கேற்ப புத்திர ஸ்தானம், களத்திர ஸ்தானம், பிதுர்ரார்ஜித ஸ்தானம், பயண ஸ்தானம் போன்றவை பலம் பெறுகின்றன. இதனால், காதுகுத்து விழா முதல், கல்யாணம், கட்டடத் திறப்பு விழா எல்லாம் படிப்படியாக நடைபெறலாம். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். மகத்தான பதவி கிடைக்கும். இதுவரை சிக்கனத்தைக் கையாண்ட உங்கள் கரங்களில் தேவையான அளவு பணம் புரளும். "பிள்ளைப்பேறு கிட்டவில்லையே" என்று கவலைப்பட்ட தம்பதியர்களுக்கு பிள்ளைப்பேறு கிடைக்கும். "கல்யாண வயது வந்தும் கல்யாணம் கைகூடவில்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு வியாழ நோக்கம் செயற்பட்டு விரைவில் திருமணம் கைகூடும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். புனிதப் பயணம் அதிகரிக்கும். அதிக முயற்சி செய்தும், இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது அடுக்கடுக்காக நடைபெறும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வரலாம். உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் கூட மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு உருவாகும்.

### கும்பச்சனி

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் சனி பகவான் சஞ்சரிக்கின்றார். "11 ஆம் இடத்துச் சனி, பண வரவு தான் இனி" என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சி கைகொடுக்கும். இதுவரை நடைபெற்ற தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சிக்கு நண்பர்களின் உதவி கிடைக்கும். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சென்ற ஆண்டில் கைநழுவிச் சென்ற புதிய ஒப்பந்தங்கள் இப்பொழுது முயற்சி எடுக்காமலேயே வந்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும். கூட்டுத்தொழிலில் இதுவரை தொல்லை கொடுத்து வந்த பங்குதாரர்களை விலக்கி விட்டுப் புதியவர்களை பங்குதாரர்களாக அமைத்துக்கொள்ள முன்வருவீர்கள். செய்தொழில் எதுவாக இருந்தாலும் செழிப்பாக அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உன்னத நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம். பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ப ஊதிய உயர்வும் உண்டு. வெளிநாட்டிலுள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ளலாமா?




என்று யோசிப்பீர்கள். கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி இடையில் வக்கிரம் பெறுகிறார். 24.08.2023 முதல் மகரத்திற்கு வந்தும் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கின்றார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப இராசிக்குச் செல்கின்றார். இந்த காலகட்டத்தில் தொழிலில் அதிக முதலீடுகள் செய்து பண்த்தை முடக்க வேண்டாம். கூட்டுத்தொழிலில் நிதானம் தேவை. கூட்டாளிகள் காட்டும் அன்பில் மாற்றம் காண நேரிடும். உத்தியோகத்தில் உயர்மட்ட அதிகாரிகளின் ஆதரவு குறையும். "சலுகைகளைப் பெற முடியவில்லையே" என்று சங்கடப்படுவீர்கள். உங்கள் முன்னேற்றத்தை மற்றவர்களிடம் எடுத்துரைப்பதன் மூலம் அதில் தடைகள் ஏற்படலாம். வரவேண்டிய ஒப்பந்தங்கள் வேறு நிறுவனங்களைச் சென்றடையும். தொழில் கூட்டாளிகள் விலகிச் செல்வதாகச் சொல்லி அச்சுறுத்துவர்.

### ராகு-கேது பெயர்ச்சி

08.10.2023 அன்று மீன இராசியில் ராகுவும் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள். 12 ஆம் இடத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கப் போவதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு தூர தேசத்தில் இருந்து உத்தியோகம் சம்பந்தப்பட்ட அழைப்புகள் வரலாம். வரும் வாய்ப்புகளை ஆராய்ந்து அறிந்து ஏற்றுக் கொள்வது நல்லது. சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்வதன் மூலம் சந்தோஷத்தை தக்க வைத்துக் கொள்ளலாம். வீடு கட்டுவது, கட்டிய வீட்டை பழுது பார்ப்பது, பிள்ளைகளின் கல்யாண நலன் கருதிச் செலவிடுவது போன்றவற்றில் கவனம் செலுத்தும் நேரமிது. வருமானப் பற்றாக்குறை அகலும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் அடிக்கடி ஆரேரக்கியத் தொல்லை வரலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

புத்தாண்டு முழுவதும் பொன் கொழிக்கும் ஆண்டாக அமைய விநாயகர் கவசம் பாடி ஆனைமுகனை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

புத்தாண்டில் புதிய திருப்பங்கள் ஏற்படும். வருடத் தொடக்கத்தில் இருந்தே வளர்ச்சி அதிகரிக்கும். நீண்ட காலமாக தொல்லை கொடுத்து வந்த கடன் பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். உடல்நலத்தில் சிறுசிறு பாதிப்புகள் வந்தாலும் உடனுக்குடன் சீராகும். பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்ப்பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். கணவன்-மனைவிக்குள் கருத்தொருமித்த வாழ்க்கையால் நிம்மதி கிடைக்கும். ராகு- கேது பெயர்ச்சிக்காலத்தில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகளோடு சம்பள உயர்வும் கிடைக்கும்.

### குரு-சனி வக்கிரம்

12.09.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும். வளர்ச்சி வரும்போது அதை ஏற்றுக் கொள்ளுங்கள். தளர்ச்சி வரும் பொழுது தக்கவிதத்தில் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கூட்டு முயற்சியில் லாபம் ஏற்படும். உத்தியோகத்தில் உங்களிடம் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். பயணங்களால் பலன் உண்டு.

புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சிகைகூடும். 27.06. 2023 முதல் 23.08.2023 வரை கும்ப ராசியிலும் பிறகு 24.08.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனி வக்கிரம் பெறுகின்றார். தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனி வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. மிகமிக கவனம் தேவை. தைரியமும் தன்னம்பிக்கையும் குறையலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் ஒவ்வொரு நாளும் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். தொழில் புரிபவர்களுக்கு குறுக்கீடுகள் அதிகரிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவரால் கொண்டு வரப்படும் அனைத்துச் சட்டங்களும்

## தமிழருக்கு எதிரானதுதான் - உறவுகள் தெரிவிப்பு

(வவுனியா)

**அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய தொல்பொருள் ஆய்வாளர்களை நாட்டிற்கு அழைத்தால் இந்த நாடு முழுவதும் தமிழர்களுடையது என்பதை நிரூபிக்க முடியும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் தெரிவித்துள்ளது.**






புதுவருட தினமான நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

உத்தேச பயங்கரவாத தடைச் சட்டம் உட்பட சிங்களவர்களால் கொண்டு வரப்படும் அனைத்துமே தமிழர்களிற்கு எதிரானது தான்.

2009 இல் தமிழர்கள் அழியும் போதும் காணாமல் ஆக்கப்படும் போதும் சிங்கள மக்கள் மௌனமாக இருந்தார்கள், அதனை ஆதரித்தார்கள்.

தற்போது இந்துகோவில்கள் தாக்கப்படும் போதும் அவர்கள் மௌனமாகவே இருக்கின்றனர். இதுவே இந்த நாட்டின் நிலைக்கு காரணம்.

ஐரோப்பிய அமெரிக்க உதவிகளுடன் பொதுவாக்கெடுப்பின் மூலம் ஒரு இறையாண்மையான தேசத்தை பெறுவதே தமிழ் மக்களின் இருப்பிற்கான தற்போதைய தேவை.

அத்துடன் தமிழ் ஊழல் அரசியல் வாதிகளை அகற்றி இளைஞர்களின் பங்களிப்புடனான ஒரு புரட்சி ஏற்படும் போது தான், எம்க்கான தீர்வு கிடைக்கும் அதற்கான சூழல் ஏற்பட்டு வருகின்றது.

அத்துடன் சிங்களவர்களின் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தொல்பொருள் ஆய்வாளர்கள் தேவை என தெரிவித்தனர். (நி-6)

# இலங்கையில் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது-சிறீதரன் எம்.பி

(முறிகண்டி)

ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்து ஜனநாயக முலாம் பூசப்பட்ட சர்வதிகாரிகளால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாக இந்த நாடு அழிக்கப் படப்போகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். 'அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு மாத காலத்திற்கு இந்த பயங்கரவாத தடைச்சட்டம் பிற்போடப்பட்டிருப்பதாகவும் திருத்தங்கள் செய்யப் போவதாகவும் அறிவித்திருந்தார்கள். அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட வெவ்வேறு நாடுகளில் இவ்வாறு சட்டம் இருப்பதாகவும் இந்த நாட்டினுடைய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகின்றார்.

ஆனால் இங்கு அரச பயங்கரவாதம் தலைவிரித்து ஆடுகின்றது.

இலங்கையிலே ஜனாதிபதியை மட்டும் ஜனநாயக போராட்டத்தின் ஊடாக மக்கள் வெளியேற்றியிருந்தார்கள். ஆனால் இன்று கொண்டுவரப்படவிருக்கின்ற பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது மீண்டும் ஒரு ஈஸ்டர் தாக்குதலையோ அல்லது இன்னுமொருவர் ஆட்சிக்கு வருவதற்காகவோ எவ்வாறு இந்த சட்டத்தை பயன்படுத்த முடியுமோ அவ்வாறு அதனை பயன்படுத்த முனைகிறார்கள் எனத் தெரிவித்தார். (நி-6-100)

## அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல்




(தருமபுரம்)

அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய மூன்று டிப்பர் வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் புளியம்பொக்கனை வண்ணாத்தியாறு மற்றும் கல்லாறு ஆகிய இரு பகுதிகளில் அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய மூன்று டிப்பர் வாகனமும் அதன் சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதாக தர்மபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-6-316)

# பொலிஸ் வீதிச் சோதனையின் போது நிற்காமல் சென்ற கார் மீது துப்பாக்கிச் சூடு

## ஒருவர் படுகாயம்

(மன்னார்)

யாழ்ப்பாணத்தில் இருந்து முழுங்காவில் பகுதியூடாக மன்னார் நோக்கிபயணித்த கார் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம் பெற்றது.

இதன் போது நவாலி மானிப்பாயை சேர்ந்த செல்வமகேந்திரன் கமலரூபன் (வயது-36) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த சமயம் முழங்காவில் பகுதியில் பொலிஸார் வீதிச் சோதனைக்காக வழி மறித்தும் நிறுத்தாமல் சென்ற போது துப்பாக்கிச் சூடு நடந்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான குறித்த நபர் மன்னார் முருங்கன் வரை பயணித்துள்ளார்.

பின் முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-285)

# தமிழர் விளையாட்டுக்கழக கரப்பந்தாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள்-2023 இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு புத்தூர் கலைமதி மைதானத்தில் வடமாகாண தமிழர் விளையாட்டுக்கழக இணைப்பாளர் ந.சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வட மாகாண விளையாட்டு திணைக்கள பணிப்பாளர் பா.முகுந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 வீதமான தென்னந்தோப்புகளை சேதப்படுத்திய 'வெண்ணிற ஈ'

## தெங்கு ஆராய்ச்சி நிலையம்

(கொழும்பு)

**வெண்ணிற ஈயின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிலையம் பரிந்துரைத்துள்ள இயற்கை எண்ணெய்களை மாத்திரம் பயன்படுத்துமாறு தெங்கு ஆராய்ச்சி நிலையம் தென்னஞ் செய்கையாளர்களுக்கு அறிவித்துள்ளது.**

செயற்கை எண்ணெய்களை பயன்படுத்துவதனூடாக சூழலுக்கு ஏற்படும் சேதத்தை ஈடு செய்ய முடியாது என இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மல்ராஜ் பீரிஸ் தெரிவித்தார்.

தேங்காய், இலங்கையர்களின் உணவில் முக்கிய இடம் பிடிக்கின்றது.

இலங்கையின் தெங்குச் செய்கையில் சுமார் ஒரு வருட காலமாக பரவி வரும் வெண்ணிற ஈயின் தாக்கம் காரணமாக தெங்கு உற்பத்தி ஓரளவு குறைந்துள்ளதாக தெங்கு செய்கையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தெங்கு ஆராய்ச்சி நிலையத்தின் தரவுகளுக்கு அமைய, வெண்ணிற ஈயின் தாக்கம் காரணமாக களுத்துறை, கம்பஹா, கொழும்பு மாவட்டங்களில் தெங்கு செய்கைக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தவிர யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, குருநாகல், கண்டி, காலி, மாத்தறை, இரத்தினபுரி, புத்தளம், அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இந்த நோயின் தாக்கம் பதிவாகியுள்ளது.



சுமார் .2 முதல் 3 மில்லி மீற்றர் அளவு கொண்ட இந்த சிறிய வெண்ணிற ஈ இலங்கையில் 80 வீதமான தென்னந் தோப்புகளை சேதப்படுத்தியுள்ளதாக தெங்குச் செய்கை சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தென்னை ஓலையின் அடிப் பகுதியில் வாழும் இந்த வெந்நிற ஈ, தென்னை மரத்தை சேதப்படுத்துவதால், தென்னை மரம் படிப்படியாக மஞ்சள் நிறமாக மாறி மரத்தின் வளர்ச்சி குன்றும் நிலை ஏற்படுகின்றது.

வெந்நிற ஈயைக் கட்டுப்படுத்த வெந்நிற ஈயை வேட்டையாடும் உயிரினமொன்றை அடையாளம் கண்டுள்ளதாக தெங்கு ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

சில தெங்கு செய்கையாளர்கள், வெந்நிற ஈயினால் ஏற்படுத்தப்பட்ட சேதத்தை கட்டுப்படுத்த் செயற்கை எண்ணெய் பயன்படுத்துவதாக தெங்கு ஆராய்ச்சி நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# பாவனைக்கு உதவாத பொருட்கள் விற்பனை வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நுகர்விற்காக வருகை தரும் மக்களை இலக்குவைத்து பாவனைக்கு உதவாத பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போதே குறித்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக அந்த அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பாவனைக்குதவாத வெங்காயம், வெள்ளைப் பூண்டு, மற்றும் உருளைக் கிழங்கு ஆகியன இவ்வாறு விற்பனை செய்யப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

அத்துடன் முட்டைக்கு 44 ரூபாய் நிர்ணய விலையாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது. (நி)

# திருமலை கடலில் மர்மப் பொருட்கள்; விசாரணைக்கு அனுப்பி வைப்பு

(திருமலை)

திருகோணமலை கரையோரப் பகுதியில் எண்ணெய், தார் போன்ற சிறிய கழிவுப் பாகங்கள் வெளியானமை தொடர்பில் கடல்சார் சுற்றாடல் அதிகார சபை பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, அந்தக் கழிவுப்பாகங்கள் கப்பல் ஒன்றில் இருந்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்டிருக்கும் என சந்தேகிப்பதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, திருகோணமலை துறைமுகத்திற்கு வெளியே நங்கூரமிடப்பட்டிருந்த தென்கொரிய கப்பல் ஒன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

திருகோணமலை கரையோரப் பகுதியில் வெளியான எண்ணெய், தார் போன்ற சிறிய கழிவுப் பாகங்கள் தொடர்பிலான தெளிவினை பெற்றுக் கொள்வதற்காக அவை பகுப்பாய்வகத்திற்கு அனுப்பபட்டுள்ளதாக கடல்சார் சுற்றாடல் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (நி)

# கணக்கறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

கணக்கறிக்கைகளை உரிய முறையில் சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள் குறித்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு விடயங்களுக்கு பொறுப்பான பிரிவுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதற்கான தீர்மானம் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சில அரசியல் கட்சிகள் 2021 ஆம் ஆண்டிற்கான தமது கணக்கறிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதை தொடர்ச்சியாக தாமதப்படுத்தி வந்த நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

14 நாட்களுக்குள் 2021 ஆம் ஆண்டிற்கான தமது கணக்கறிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு, அரசியல் கட்சிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது.

இந்த காலக்கெடு, கடந்த வாரம் நிறைவடைந்ததாக தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கணக்கறிக்கைகளை உரிய முறையில் இதுவரை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளின், ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளுக்கான அங்கீகாரத்தை முடிவுறுத்தவும் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 170 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 400 |
| தக்காளி | 200 | 150 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 150 | 140 | 120 | 200 |
| கரட் | 160 | 200 | 200 | 300 |
| பூசணி | 60 | 80 | 60 | 40 |
| புடோல் | 150 | 140 | 160 | 160 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | 350 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 240 | 280 | 180 | 250 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 280 | 250 | 200 | 250 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 | 350 |
| பீற்றூட் | 120 | 150 | 160 | 150 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 700 | 800 |
| போஞ்சி | 280 | 200 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 320 | 300 |
| கீரை – 1 பிடி | 80 | 120 | 80 | 120 |
| தேசிக்காய் | 350 | 250 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 300 | 280 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 100 | — | 280 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 30 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | — | — | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 153





"சற்று முன் மிகப் பிரியத்தோடு பேசினீர்களே. அந்த இளைய பிராட்டி குந்தவைதேவி தான்."

"பொய்! பொய்! அப்படி ஒரு நாளும் இருக்க முடியாது! என்னை வேடிக்கை செய்யப் பார்க்கிறீர்!"

"மகாராணி! இந்த ஓலையை ஏற்கெனவே பலர் திருடிப் பார்த்து விட்டார்கள். ஆகையால் தாங்களும் இதைப் பார்ப்பதினால் மோசம் ஒன்றும் வந்து விடாது!" என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலர் குந்தவைக்குக் கொடுத்த ஓலையை எடுத்து நீட்டினான்.

நந்தினி ஓலையை விளக்கினடியில் பிடித்துக் கொண்டு படித்தாள். படித்து முடித்தபோது அவளுடைய கண்களிலிருந்து கிளம்பிய மின்னல் ஜ்வாலை நாக சர்ப்பத்தின் வாயிலிருந்து வெளிவந்து மறையும் அதன் பிளவுபட்ட நாவை வந்தியத்தேவனுக்கு நினைவூட்டியது. அவனையறியாமல் அவன் உடம்பு நடுங்கியது.

நந்தினி கம்பீர பாவத்துடன் வந்தியத்தேவனைப் பார்த்து, "ஐயா! நீர் இந்தக் கோட்டையிலிருந்து உயிரோடு தப்பிச் செல்ல எண்ணுகிறீர் அல்லவா?" என்று கேட்டாள்.

"ஆம் அம்மா! அதற்குத்தான் தங்கள் உதவியை நாடி வந்தேன்."

"ஒரு நிபந்தனையின் பேரில்தான் உம்மைத் தப்பித்து விட நான் உதவி செய்யலாகும்."

"நிபந்தனையைச் சொல்லுங்கள்!"

"இந்த ஓலைக்குக் குந்தவை என்ன மறு ஓலை கொடுக்கிறாளோ, அதை மறுபடியும் என்னிடம் கொண்டு வந்து காட்ட வேண்டும், சம்மதமா?"

"மிக அபாயமான நிபந்தனை போடுகிறீர்கள்!"

"அபாயத்துக்கு அஞ்சாதவர் என்று சற்று முன்னால் பெருமை அடித்துக் கொண்டீரே?"

"அபாயத்துக்குத் துணிவது என்றால் அதற்குத் த்குந்த பரிசு கிட்டவேண்டும் அல்லவா?"

"பரிசா? பரிசா வேண்டும்? நீர் கனவிலும் அடையக் கருதாத பரிசு உமக்குக் கிடைக்கும். சோழ சாம்ராஜ்யத்தில் இன்று சர்வ சக்தி வாய்ந்தவராய் விளங்கும் பெரிய பழுவேட்டரையர் எந்தப் பரிசுக்காக வருஷக்கணக்காகத் தவம் கிடக்கிறாரோ அத்தகைய பரிசு உமக்குக் கிடைக்கும்!" என்று கூறி நந்தினி வந்தியத்தேவன் பேரில் மறுபடியும் மோகனாஸ்திரத்தைத் தூவினாள்.

பாவம்! வல்லவரையனுடைய தலை சுழன்றது. நெஞ்சே! தைரியத்தைக் கடைப்பிடி! அறிவை இழந்து விடாதே! என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அச்சமயம் அவனுக்குத் துணை செய்ய வந்ததைப் போல் அருகிலுள்ள தோட்டத்திலிருந்து ஆந்தையின் கடூரமான குரல் கேட்டது. ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை கேட்டன.

வந்தியத்தேவனுடைய உடம்பு சிலிர்த்தது. நந்தினி தோட்டத்தில் ஆந்தைக் குரல் வந்த இடத்தை நோக்கி, "நிஜ மந்திரவாதியே வந்து விட்டான்!" என்றாள்.

(தொடரும்)

"எனக்கு அந்தரங்கமான பணி ஆள் ஒருவர் தேவையாயிருக்கிறது. இந்த அரண்மனையில் உமக்கு வேலை வாங்கிக் கொடுத்தால், ஒப்புக் கொள்வீரா?" என்று கேட்டாள்.


"இதே மாதிரி சேவையை இன்னொரு மாதரசிக்குச் செய்வதாக ஏற்கெனவே ஒப்புக் கொண்டு விட்டேன். அவள் வேண்டாமென்று நிராகரித்தால் தங்களிடம் வருகிறேன்."

"அது யார் அவள், என்னோடு போட்டிக்கு வருகிறவள்?"



# சிறுவர் அரங்கம்

## நாம் செய்யும் காரியங்களும் பேசும்



ஒரு ஊரில் ஒரு குயவன் அவன் தாய், மனைவி, மற்றும் மகனுடன் வாழ்ந்து வந்தான். குயவனின் மனைவிக்கு அவளது மாமியாரைப் 'பிடிக்கவில்லை. அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பத் துணிந்தாள். குயவனை தினமும் நச்சரித்தாள். அவனது அம்மாவை பக்கத்தில் ஒரு வீட்டில் குடியமர்த்தும்படி சொன்னாள்.

வெகு நாட்கள் குயவன் அவள் சொன்னதை காதிலேயே போட்டுக் கொள்ளாமல் இருந்தான்.

மனைவி விடாமல் நச்சரித்தாள். அவனது அம்மாவிற்குத் தனியாக இருந்தால் ஒரு குறையும் வராது என்றும், அவரது சாப்பாட்டுத் தேவையைத் தான் கவனித்துக் கொள்வதாகவும் சொன்னாள்.

ஒரு நாள் குடியானவனுக்கு நச்சரிப்புத் தாங்க முடியவில்லை. அம்மாவை இருபது அடி தள்ளியிருந்த ஒரு வீட்டில் குடியமர்த்தினான். மனைவி மாமியாரிடம் குயவன் செய்த தட்டு ஒன்றைக் கொடுத்து, வேளா வேளைக்குத் தன் வீட்டுக்குத் தட்டை எடுத்து வந்தால் அதில் உணவை நிரப்பித் தருவதாகவும் அதை மாமியார் அவர் வீட்டுக்கு எடுத்துச் சென்று மகிழ்ச்சியாகச் சாப்பிடலாம் என்றும் கூறினாள்.

மாமியாருக்கு இது அவமானமாகத் தோன்றினாலும், தன் மகனுக்காக வாயைத் திறக்காமல் மருமகள் சொன்ன வழியில் வாழ்ந்து வந்தார்.

பேரனுக்குப் பாட்டி வீட்டை விட்டுப் போனது அறவே பிடிக்கவில்லை. அவன் அம்மாவுக்குத் தெரியாமல் சில சமயம் பாட்டி வீட்டிற்குச் சென்று விளையாடுவான்.

அவன் வளர வளர குயவன் மட்பாண்டம் செய்வதைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான். சில சமயம் குயவன் வேலை செய்யாத போது அவனது இயந்திரத்தை மகன் இயக்கிப் பார்க்க ஆரம்பித்தான்.

ஒரு நாள் மகனுக்கு அப்பாவைப் போலவே மட்பாண்டம் செய்ய வந்தது. மிகச் சிறு வயதிலேயே அவன் அப்பாவின் தொழிலைக் கற்றுக் கொண்டான்.

அவன் முதல் முதலில் தன் அம்மாவுக்கு அருமையான தட்டு ஒன்றைச் செய்தான். அதை அவன் அம்மாவிடம் கொடுத்த போது அவள் மகனின் திறமையை நினைத்து பெருமைப்பட்டாள். தனக்கு அவன் முதலில் பொருள் செய்து கொடுத்ததை எண்ணி அளவில்லா மகிழ்ச்சி அடைந்தாள். தனது சிறிய மகனை இவ்வாறு கேட்டாள். "மகனே! நீ செய்த தட்டு மிக அருமை. எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எத்தனையோ பாண்டங்கள் இருக்கும் போது ஏன் எனக்கு ஒரு தட்டைச் செய்து தர வேண்டும் என்று உனக்குத் தோன்றியது?"

மகன் குழந்தைத்தனமாகச் சொன்னான்: "அம்மா! ஒரு நாள் நான் அப்பாவைப் போலக் கல்யாணம் செய்து கொள்வேன். அப்போது நீ பாட்டியைப் போல பக்கத்து வீட்டுக்குப் போய் விடுவாய் அல்லவா. அப்போது உனக்கு என் மனைவி தினமும் சாப்பாடு கொடுக்க ஒரு தட்டு வேண்டுமல்லவா! அதைத்தான் உனக்கு நான் இப்போது செய்து கொடுத்தேன்"

குயவனின் மனைவிக்குத் தான் செய்த காரியத்தின் தீவிரம் புரிந்தது. மிகவும் வருந்தினாள். மாமியாரைத் தன் வீட்டுடன் வரவழைத்து மிகவும் அன்புடன் கவனித்துக் கொண்டாள்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> கண் பார்வையற்றவன் குருடனல்ல தன் குற்றங்களை உணராதவனே உண்மையான குருடன்.
> – காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையில் குரங்குகளைத் தவிர வேறு என்னதான் இருக்கிறது!

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று மார்தட்டியவர்களின் நிலைமை எப்படியாயிற்று என்பதை உலகம் நன்கு அறிந்துள்ளது.

சிறுபான்மைத் தமிழ் மக்களை அடிமைப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தம் நடத்தி நாட்டின் செல்வங்களை அழித்துவிட, இப்போது சர்வதேச நாணய நிதியம் உதவி செய்யாவிட்டால் இலங்கை பிச்சை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றாகிவிட்டது.

நிலைமை இதுவாக இருக்கின்ற போதிலும் உழைப்பின் பெறுமதி தெரியாத பௌத்த துறவிகள் இன்னமும் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற மமதையில் சைவத் தமிழ் மக்களின் வழிபாட்டிடங்களைக் கபளீகரம் செய்வதை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றனர்.

இதுதவிர, வரலாற்றுச் சிறப்புமிக்க சிவாலயங்கள் அமைந்த இடங்களில் பௌத்த அடையாளங்களை நிறுவுவதில் அவர்கள் இன்னமும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தவிர, வெடுக்குநாறி மலையில் வீற்றிருந்த ஆதிலிங்கத்தை உடைத்ததுடன் அங்கிருந்த விக்கிரகங்களை அகற்றியவர்கள் இன்னமும் இனந்தெரியாதவர்களாக இருப்பதுடன் மீளவும் ஆதிலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்கின்றவர்கள் இலங்கையில் இருந்து ஒரு இலட்சம் குரங்கள் சீனாவுக்கு அனுப்படவுள்ளன என்ற செய்தியை அறிவார்களா என்பதுதான் தெரியவில்லை.

ஆம், உலக நாடுகள் எத்தனையோ வகையான உற்பத்திகளை உருவாக்கி அவற்றை ஏற்றுமதி செய்கின்றன.

இதையும் கடந்து, விண்வெளி ஆராய்ச்சி, விவசாய உற்பத்திகளில் புதிய தொழில்நுட்ப அறிமுகங்கள், கைத்தொழில் புரட்சிகள், மருத்துவத்தில் புதுமைகள் என எத்தனையோ சாதனைகளை நிகழ்த்த, நம் நாடோ ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவதைத்தான் தனது சாதனையாக ஆக்கியுள்ளது.

ஆம், விவசாயத்துக்கு குரங்குகள் இடையூறாக உள்ளன என்ற அடிப்படையில் ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு அனுப்ப இலங்கை அரசு முடிவெடுத்துள்ளதாம்.

இவ்வாறு சீனாவுக்கு அனுப்பப்படும் குரங்குகள் அங்கு மிருகக்காட்சி சாலைகளில் அனுமதிக்கப்படும் என்பதாக தகவல்கள் இருந்தாலும் இங்கு தொங்குமான் என்று பெயர் போன குரங்குகள் சீனாவில் தலைக்கறியாக ஆகாதென்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஆக, இலங்கையில் பிறந்த மக்களுக்கு மட்டுமல்ல இலங்கையைத் தமது வாழ்விடமாகக் கொண்ட குரங்குகளுக்கும் விதி ஒன்றுதான்.

என்ன செய்வது எங்கள் நாட்டில் குரங்குகளைத் தவிர வேறு என்னதான் இருக்கிறது சீனாவுக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு.

## ரணில் தொடர்ந்து ஆட்சி செய்தால் இலங்கை பிரகாசமாக ஜொலிக்கும்

### வஜிர அபேவர்த்தன எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் இலங்கையை தொடர்ந்து ஆட்சி செய்தால் இலங்கை பிரகாசமாக ஜொலிக்கும் என ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப் பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டு மக்கள் மூன்றாண்டுகளுக்கு பின்னர் தமிழ்-சிங்கள புத்தாண்டை கொண்டாடுவதாகவும் எதிர்காலத்தில் வரும் அனைத்து பண்டிகைகளையும்கொண்டாடும்நிலைமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கி வருவதாகவும் வஜிர அபேவரத்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையை இன்னும் 10 முதல் 12 ஆண்டுகள் ரணில் விக்கிரமசிங்க ஆட்சி செய்தால், இலங்கை உலகில் உயர்ந்த இடத்தில் ஜொலிக்கும். உலகில் வங்குரோத்து அடைந்த நாடுகள் அந்த நிலைமையில் இருந்து மீள பல வருடங் களாகின.

இலங்கையில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க என்ற தேசிய தலைவர் அந்த நிலைமையை மிக குறுகியகாலத்தில் முகாமைத்துவம் செய்து நாட்டை ஓரிடத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இலங்கை மக்கள் சிந்தித்து செயற்பட்டால், இலங்கையின் கடனை செலுத்தி, உலகிற்கு கடனை கொடுக்கும் நாடாக மாற்றும் இயலுமை ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## ஜனாதிபதி தேர்தலால் பிளவுபடும் நிலையில் பெரமுன

(கொழும்பு)

பொதுஜன பெரமுன கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அண்மையில் கருத்துரைத்த பொதுஜன பெரமுனவின் தவிசாளர் சாகர காரியவசம் பசில் ராஜபக்ஷவே சிறந்தவர் எனத் தெரிவித்திருந்த நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே போட்டியிடுவார் என பொது ஜன பெரமுன உறுப்பினர்கள் வெளியிட்ட அறிக்கைகளை அடுத்து இந்தச் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தயார் என ஜனாதிபதியும் சூசகமாகத் தெரிவித்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வந்தாலும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன என்ற ரீதியில் நிச்சயமாக ஆதரவு வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சரும், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினருமான திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். (ம-7,9)

## கிரியெல்ல பிரதேசத்தில் பாரிய தீ விபத்து

கிரியெல்ல பிரதேசத்தில் பண்டிகைக்கால தற்காலிக பட்டாசுக்கடை ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் தீ பரவியதாகவும், கிரியெல்ல பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகளின் தலையீட்டினால் தீ அணைக்கப்பட்டதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தீ விபத்தால் கடையில் இருந்த பட்டாசுகள் அனைத்தும் எரிந்து நாசமானது. இந்த தீ விபத்தில் இருபுறமும் உள்ள இரண்டு கடைகளின் சொத்துக்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரியெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## யாழ்.சிறைச்சாலைக்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்திற்கு கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிள்ளையார் ஆலயத்திற்கு கும்பாபிஷேகத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டு விசேட வழிபாடுகள் இடம்பெற்றது.

பிறந்துள்ள சோபகிருது ஆண்டான நேற்றைய தினம் சிறைப்பட்டு இருக்கும் காலத்தில் கூட தங்கள் இறை வழிபாடுகளை தடையின்றி மேற்கொள்ளும் நோக்கில் இவ் ஆலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

லண்டனைச் சேர்ந்த தொழிலதிபர் சி.அமரசிங்கத்தின் முழுமையான நிதிப் பங்களிப் புடன் குறித்த ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம்நடைபெற்றது.

யாழ்.கதிரேசன் கோவில் பிரதமகுரு பாலசுதர்சன் சிவாச்சாரியார் கும்பாபிஷேகத்தை மேற்கொண்டதுடன் இந்நிகழ்வில் சிறைச்சாலை அத்தியட்சகர் கே.பி.ஏ. உதயகுமார, மற்றும் ஏனைய சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,9,33)

## இருவரை தாக்கி விட்டு ரூ.5 இலட்சம் கொள்ளை

(கொழும்பு)

இருவரை தாக்கி ஐந்து இலட்சம் ரூபாவை கொள்ளையடித்த குற்றச்சாட்டின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் மிரிஹான பத்தேகன பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளது.

நுகேகொட பிரிவு போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் மற்றொருவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதாக மிரிஹான தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மேலும் இருவரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

## ரக்பி ஒன்றிய தலைமையகத்திற்கு சீல் வைத்த அதிகாரிகள்

(கொழும்பு)

டொரிங்டனில் உள்ள ரக்பி ஒன்றிய தலைமையகம் விளையாட்டு அமைச்சக அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி இலங்கை ரக்பி ஒன்றியம் கலைக்கப்பட்டு விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஸ்திரப்படுத்தல் குழுவொன்று நியமிக்கப்பட்ட காரணத்தால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் தமக்கு அறிவிக்காமல் சீல் வைத்துள்ளதாக ரக்பி ஒன்றிய அதிகாரிகள் குற்றம் சாட்டுகின்றனர். (ம-7,9)

## போலி நாணயத்தாள் பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

புத்தாண்டு காலங்களில் போலி நாணயத் தாள்கள் கைமாறக்கூடும் என்பதால் பணத்தைப் பயன்படுத்துவதில் கவனமாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் போலி நாணயத்தாள்களை சந்தையில் கைமாற்றுவதற்கு மோசடிக்காரர்கள் முயற்சிக்கின்றனர் என்ற தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

## பயணிகளுடன் சென்ற வேளை பற்றி எரிந்த முச்சக்கர வண்டி

(களுத்துறை)

நேற்றைய தினம் பயணிகளுடன் பயணித்த முச்சக்கர வண்டியொன்று திடீரென நடுவீதியில் தீப்பற்றி எரிந்துள்ளது.

தீயினால் முச்சக்கர வண்டி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

ராகம பிரதேசத்தில் இருந்து அகலவத்தை பகுதிக்கு பயணிகளுடன் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

எனினும் தெய்வாதீனமாக இந்த தீ விபத்தில் பயணிகள் யாருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்)

01

தமிழ் நாட்டைப் பொருத்த வரையில் இலங்கை -இந்திய கடல் எல்லை வரையறுக்கப்பட்ட நாளிலிருந்து அது மீனவர்களின் பிரச்சினையாகி அதுவொரு அரசியல் பிரச்சினையாக தலைதூக்கியுள்ளது. 40 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாடு அரசியலில் முக்கிய பேசுபொருளாக அமைந்திருப்பது கச்சத்தீவு விவகாரம். கச்சத்தீவை மீட்போம், தமிழ்நாடு மீனவர்கள் நலனை நிலைநாட்டுவோம் என்பது அரசியல் கட்சிகளின் வழக்கமான வாக்குறுதிகளில் ஒன்றாக மாறியுள்ளது.

தமிழ்நாட்டுக் கட்சிகள் சில, இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினையில் குளிர்காய்ந்து கொண்டு, மீன் முதலாளிகளின் பக்கம் நிற்பதுடன், தமது வாக்கு வங்கிகளுக்கு ஏற்றவாறும் நடந்து கொள்கின்றனர்.

1974 இல் கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்ட போதும் இன்னமும் கச்சதீவு தமக்கு சொந்தமானது என்ற நிலைப்பாட்டிலேயே தமிழக மீனவர்கள் உள்ளனர். அவர்கள் தங்களது கடல் எல்லையையும் தாண்டி வந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடியைத் தொடர்கின்றனர்.இதனால் இலங்கை தமிழ் மீனவர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து அவர்கள் சற்றும் சிந்திப்பதாக தெரியவில்லை.

ஆரம்பத்தில் நெடுந்தீவு பாக்கு நீரிணை கடல் பரப்புக்களில் தான் இந்திய மீனவர்களின் ஊடுருவல் காணப்பட்டது. இன்று மன்னார் குடாவின் தென்பகுதியில் உள்ள கடல் பரப்புக்களிலும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் காணப்படுகிறது. அவர்கள் அதிகளவு இழுவைப் படகு மட்டுமல்லாமல் பெரிய படகுகளில் வந்து மிகவும் நீளமாகத் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளையும் பயன்படுத்துகின்றனர். ஒட்டுமொத்தமாக மன்னார் வளைகுடா முழுவதும் வாரத்தில் மூன்று நாட்கள் இந்த மீனவர்களின் கட்டுப்பாட்டில் தான் காணப்படுகிறது என்று மன்னார் மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இரு நாட்டு தமிழ் மீனவர்களுக்குமிடையே நடுக்கடலில் இடம்பெறுகின்ற முறுகல்களால் அவர்களது உறவில் விரிசல் ஏற்படுகின்றது. வடபகுதித் தமிழர்களுக்கும் தமிழக மக்களுக்குமிடையே இதனால் கசப்புணர்வு தோன்றிவிடக் கூடுமென்பதே தமிழ்ப் பற்றாளர்களின் கவலையாக உள்ளது. இலங்கை தமிழர்களை தொப்புள் கொடி உறவுகளாக எண்ணி எப்போதும் ஆதரவுக்கரம் நீட்டி அரவணைத்துக் கொண்டவர்களும் தமிழக மக்களென்பதை மறக்க இயலாது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள சாதாரண கூலித் தொழிலாளர்களே ஆவர். அவர்களை வேலைக்கமர்த்தி வேலைவாங்கும் முதலாளிகளில், இந்திய பாராளுமன்றத்தைச் சேர்ந்தவர்களும் அமைச்சர்களும் அடங்குவர். கடல் எல்லையைத்தாண்டி மீன்வளத்தைக் வாரி அள்ளிக் கொண்டுவருமாறு, சாதாரண மீனவர்கள், முதலாளிகளால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

கச்சதீவு தமக்கு சொந்தமானது என்ற நிலைப்பாட்டில் தமிழகம் இருந்தாலும் இந்திய மத்திய அரசு ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைக்குச் சொந்தமானது என்பதை தெளிவாக அறிவித்துவிட்டது. எனவே கச்சதீவை இந்தியா மீளப்பெறும் என்பது கனவிலும் நடக்கக் கூடிய காரியமல்ல.

இலங்கைக் கடலில் அத்துமீறும் இந்திய மீனவர்கள் பாரிய இழுவைப்படகு மூலம் மீன்பிடிப்பதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதில் இலங்கை அரசாங்கமும் வடபகுதி மீனவர்களும் உறுதியாக இருகின்றார்கள். இந்த முறையற்ற மீன்பிடி முறையினால் அதிகளவான மீன்களை பிடிக்க முடியும். ஆனால், அந்தமுறை கடற்பாறைகள், கடற்பாசிகள் உள்ளிட்ட மீன் விருத்திக்கு அவசியமான வளங்களை கொடூரமாக சிதைத்து விடுகின்றன.

இலங்கை கடற்படையினரால் தாக்குதலுக்கு உள்ளாகும் தமிழக மீனவர்கள் தொடர்பாக தமிழகத்தில் காட்டப்படும் ஊடக விம்பம் விநோதமானது. தமிழர்களை கண்டால் சிங்களவனுக்கு பிடிக்காது அதனாலே தாக்குகின்றனர் என்கிறனர். அப்படியே தமிழ்நாட்டு மாநில அரசும் தமது மக்களிடையே அதன் வலிகளை வைத்து அரசியல் செய்கின்றனர்.

அத்துமீறி வரும் மீனவர்களின் வருகையை தடுப்பது பற்றி இரு நாடுகளுக்கும் இடையே கூட்டு நடவடிக்கை குழு கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நியமிக்கப்பட்டது. ஒவ்வொரு 6 மாதத்துக்கு ஒரு முறையும் குழு கூட வேண்டும். எனினும் இந்தியா இதில் அக்கறை காட்டவில்லை.

கூட்டுப் பணிக்குழுவின் முதல் கூட்டம் 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்றது. இரண்டாவது கூட்டம் கொழும்பில் 2017 ஏப்ரல் 7 இல் நடந்தது. மூன்றாவது கூட்டம் அதே ஆண்டில் ஒக்டோபர் 13 ஆம் திகதி புதுடில்லியிலும் நான்காவது கூட்டம் 2020 டிசெம்பர் 30 ஆம் திகதி மெய்நிகர் வடிவிலும் நடைபெற்றன. ஐந்தாவது கூட்டம் இந்த வருடம் மார்ச் மாதம் 25 ஆம் திகதி மெய்நிகர் வடிவில் நடைபெற்றன. இக்கூட்டங்களில் இப் பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தை மட்டுமே நடக்கின்றன. நடைமுறையில் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை.

இலங்கை கடற்படையினரும் இந்தியக் கடற்படையினரும் இணைந்து எல்லை ஓரப் பாதுகாப்பினை பலப்படுத்தி ரோந்துகளை மேற்கொண்டு எல்லை தாண்டிவரும் பிரச்சினைகளை தவிர்க்க முடியும். இருநாட்டுக் கடற்படையினரும் எல்லை தாண்டிவரும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் மீனவர்களை துன்புறுத்தலுக்கு உட்படுத்தாது தொடர்ச்சியான பாதுகாப்பினைப் பலப்படுத்தி எல்லை தாண்டிவரும் மீனவர் பிரச்சினையை தடுப்பதன் ஊடாக அப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதும் ஒரு வழியாகும். ஆனால் அதனைச் செய்வதற்கு இரு நாடும் முன்வரவில்லை.




அகதிகளாக அடைக்கலம் கொடுத்தோம். எங்கள் நிலங்களில் தொழில் புரிய அனுமதி கொடுத்தோம். ஏராளமான நிதி பொருள் உதவி செய்தோம். இவ்வாறு எல்லாவற்றையும் பெற்ற எம் உறவுகள் ஏன் எம்மை மீன் பிடிக்க அனுமதிக்கிறார்கள் இல்லை என்று ஆதங்கப்படுகிறார்கள் எம் தமிழக உறவுகள்.

குண்டடி இடம்பெற்ற போது தமிழகத்திற்கு அதிகம் இடம் பெயர்ந்தவர்களும் இலங்கையின் வடக்குக் கரையோரப் பகுதிகளில் இருந்த மக்கள் தான் என்பதையும் கவனிக்க வேண்டும். எம் நாட்டில் தற்போது நிலவும் பஞ்சத்தால் இன்றும் தமிழகம் நோக்கிச் செல்ல முனைவதும் எம் மக்கள்தான்.

**இந்தியா - இலங்கை கடல் எல்லை**

கம்பனி ஆட்சிக் காலத்தில் 1755 முதல் 1763 வரை சென்னையின் ஆளுநராக இருந்த ராபர்ட் பாக்கின் நினைவாக பாக்கு நீரிணை (பாக்குஜலசந்தி) பெயரிடப்பட்டது. ஆங்கிலக் கால்வாயைக் காட்டிலும் குறுகியது. இது இந்தியாவின் தென்கிழக்கு கடற்கரையிலிருந்து இலங்கையின் வடக்கு கடற்கரையை பிரிக்கிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல் எல்லைநான்கு வெவ்வேறு கடல்பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் வங் காளவிரிகுடா, அடுத்து பாக்கு நீரினை, நடுவில் பாக்கு விரிகுடா தெற்கில் மன்னார் வளைகுடா. பாக்கு நீரிணை வழியாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சராசரி தூரம் சுமார் 32 கி.மீ ஆகும்.

**பாக்குநீரிணை**

பாக்குநீரிணை என்பது இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தையும் இலங்கைத் தீவின் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் பிரிக்கும் ஒரு நீரிணையாகும். இது வடகிழக்கே வங்காள விரிகுடாவை தென்மேற்கே பாக்குவிரிகுடாவுடன் இணைக்கிறது. இந்நீரிணை 53 முதல் 82 கிலோ மீற்றர்கள் (33 முதல் 51 மைல்கள்) அகலமானது. தமிழ்நாட்டின் வைகை உட்படப் பல ஆறுகள் இந்நீரிணையுடன் கலக்கின்றன.

இப் பகுதியில் பெரிய கப்பல்கள் செல்வதற்குப் போதிய ஆழமின்மையின் காரணமாக இந்தியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் இருந்து மேற்கு கடற்கரைப் பகுதிகளுக்குச் செல்லும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றிக்கொண்டு செல்கின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு முழுவதும்...

சகருமான நிஹால் தல்துவ இது தொடர்பான அறிவிப்பை விடுத்துள்ளார்.

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கண்டறிவதற்காக நடத்தப்படும் சோதனைகள் மற்றும் மக்களின் பாதுகாப்புக்காக சிவில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் புலனாய்வு உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (ம-7,9)

## யாழ்.பண்ணை...

அமைப்பினர் நாகபூசணி அம்மனின் திருவுருவை பிரதிஷ்டை செய்ததாக அறிய முடிகின்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம் அமைந்த தீவகத்தின் நுழைவாயிலாக யாழ்ப்பாணம் பண்ணை இருப்பதால், அவ்விடத்தில் நாகபூசணி அம்மனின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தெய்வீக அம்சம் நிறைந்த நாகபூசணி அம்மனை பெருந்திரளான மக்கள் நேற்றுத் தரிசித்ததுடன் புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டனர். (ம)

## அனைத்து கடன்...

சீனா இணைந்து கொள்வதை இலக்காகக் கொண்டு இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கான பொதுவான தளமொன்றை ஏற்படுத்தவுள்ளதாக ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் ஆகியன அறிவித்துள்ளன.

நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் கடன் சுமையைத் தீர்ப்பதற்கு இந்த செயன்முறை ஒரு முன்மாதிரியாக அமையும் என இந்த மூன்று நாடுகளும் நம்புவதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கான பொதுவான தளமொன்றை அமைக்கும் நடவடிக்கை வரலாற்று ரீதியானது என ஜப்பானிய நிதி அமைச்சர் ஷுனிச்சி சுஸுகி தெரிவித்துள்ளார்.

Paris Club போன்ற செல்வந்த கடன் வழங்குநர்கள் மாத்திரமின்றி, சீனா போன்ற வளர்ந்து வரும் கடன் வழங்குநர்களும் கடன் மறுசீரமைப்பு குறித்து கவனம் செலுத்துவது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கடன் மறுசீரமைப்பிற்கான புதிய தளத்தில் அனைத்து கடன் வழங்குநர்களும் இணைவதற்கான சந்தர்ப்பம் எப்போதும் திறந்த நிலையிலேயே உள்ளதாகவும் ஜப்பானிய நிதி அமைச்சர் ஷுனிச்சி சுஸுகி தெரிவித்துள்ளார். (ம-7,9)

## வெயிலில்...

கொள்ளுமாறு அந்த திணைக்களம் பொதுமக்களை கோரியுள்ளது.

அத்துடன், அதிக தாகம் மற்றும் தசைப்பிடிப்பு போன்றன ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதவிர வயோதிபர்கள் மற்றும் நோயாளர்களை வீட்டிற்குள்ளேயே தங்கவக்குமாறும் அந்த திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (ம-7,9)

## இலங்கைக்கு...

கடன் வழங்குநர்களையும் கையாள்வதில் வெளிப்படைத்தன்மையும் சமத்துவத்தை உறுதிப்படுத்த கடன் வழங்குநர்களுக்கிடையில் ஒத்துழைப்பும் முக்கியமானது என அவர் வலியுறுத்தினார்.

பொருளாதார நெருக்கடியை கையாள இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார். (ம-7,9)

## நாவலரின்...

புதிதாக அமைக்கப்பட்ட நாவலர் பெருமானின் உருவச்சிலை நேற்று மாலை 5 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனால் நாவலர் பெருமானின் உருவச்சிலை திறந்துவைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் சமயத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-7,9,33)

## தமிழ் மொழி...

இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்ட புத்தாண்டு வாழ்த்தில் தமிழ் மொழி நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் தமிழ் - சிங்கள புத்தாண்டை மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நேற்று வெளியிட்ட வாழ்த்து செய்தியில் தமிழ் முற்றாக அகற்றப்பட்டுள்ளது.

அரச நிறுவனம் சார்ந்த எந்தவொரு விடயத்திலும் தமிழ் இருக்க வேண்டும் என்பது அரசியல் யாப்பாகும். எனினும் திட்டமிட்ட வகையில் தமிழ்மொழி நிராகரிக்கப்பட்டு வருகிறது.

இலங்கை அணிக்கு பல இலட்சம் தமிழ் ரசிகர்கள் உள்ளனர். இவ்வாறான நிலையில் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் செயற்பாடு ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் அதிருப்தி அடைய வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## வெளிப்படைத்...

பதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க,

"பிரான்ஸ் மற்றும் இந்தியாவுடன் இணைந்து இந்த முக்கியமான சந்திப்பை ஏற்பாடு செய்ததற்காக ஜப்பான் அரசாங்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையின் கடன் நெருக்கடியைத் தீர்ப்பதில் விரைவான முன்னேற்றத்தை அடைய உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களின் கூட்டு முயற்சியின் தொடக்கத்தையும் இது குறிக்கிறது. தனியார் கடன் வழங்குநர்கள். இந்த முயற்சிகளுக்கு ஆதரவளிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். நானும் நன்றி சொல்ல விரும்புகிறேன். எல்லா கடன் வழங்குபவர்களுக்கும் மற்ற பங்குதாரர்களுக்கும் வெளிப்படைத்தன்மையுடன் ஒப்பீட்டு சிகிச்சையின் அடிப்படையில் தொடர்ந்து பணியாற்ற எங்கள் அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

இது சமூக - பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நல்ல அடித்தளத்தை அமைக்கும் என்றார். (ம-7,9)

# நோயாளர்களுடன் புத்தாண்டு கொண்டாடிய தாதியர்கள்



இலங்கை முழுவதும் நேற்று தமிழ், சிங்கள புத்தாண்டை மக்கள் கொண்டாடினர்.

இந்நிலையில் இலங்கையில் உள்ள அரச வைத்தியசாலை ஒன்றில் புத்தாண்டை நோயாளர்களுடன் தாதியர்கள் கொண்டாடியுள்ளனர்.

குறித்த தாதியர்கள் நோயாளர்களுக்கு இனிப்பு மற்றும் பலகாரங்களை பகிர்ந்து தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

அந்தப் புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

அதுமட்டுமின்றி இத்தாதிமார்களை நெட்டிசன்கள் பலரும் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

# மட்டக்களப்பில் படகு அனர்த்தம் தவிர்க்கப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுதாவளையில் நேற்று ஏற்படவிருந்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு களுதாவளை கடலில் இளைஞர்கள் சிலர் இயந்திரம் பொருத்திய சிறிய படகு ஒன்றில் சவாரி செய்தனர்.

இதனையடுத்து அதில் அங்கிருந்த ஆண்களும் பெண்களும் ஏறிய நிலையில் படகின் இயந்திரம் இயங்கவில்லை.

இந்தநிலையில் படகு கரையில் இருந்து குறிப்பிட்ட தூரத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

இதன்போது பாரிய அலை ஒன்று குறித்த படகை கரையை நோக்கி தாக்கி எறிந்துள்ளது.

இதில் ஆண் ஒருவர் வீழ்ந்த நிலையில் அவர் மீது படகு வீழ்ந்துள்ளது.

எனினும் அவர் அங்கிருந்தோரால் மீட்கப்பட்டார். ஏனையவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படவில்லை. (ம-7,9)

# புத்தளத்தில் கலவரமாக மாறிய போதைக்கு எதிரான போராட்டம்

(புத்தளம்)

புத்தளம் - கரம்பை உலுக்காப்பள்ளம் பகுதியில் போதை வியாபாரத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் கலவரமாக மாறியுள்ளது.

கிராமத்தில் அதிகரித்து வரும் போதை வியாபாரத்தை நிறுத்துமாறு கோரி நேற்று முன்தினம் கிராம மக்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போதைப்பொருளை விற்பனை செய்யவேண்டாமென்று தெரிவித்த இளைஞர்கள் மீது போதை வியாபாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்னயடுத்து அப்பகுதி இளைஞர்களும் போதை வியாபாரிகளைத் தாக்கியுள்ளனர்.

இதனால் போதை வியாபாரிகளுக்கும் அப்பகுதியிலுள்ள இளைஞர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதன்பின் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுதிரண்டு பேரணியாக சென்று போதை வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு வந்த நுரைச்சோலைப் பொலிஸ் பொறுப்பதிகாரி இரண்டு கிழமைகளில் போதை வியாபாரத்தை அவ்விடத்திலிருந்து நிறுத்தித் தருவதாக கிராம மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளார். (ம-7,9)

## ரணில் அரசுக்கு...

துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு பயந்த, மக்கள் அபிப்பிராயத்தை ஊசலாட்டும் திறமையற்ற தற்போதைய அரசாங்கம் 24 மணிநேரமும் 365 நாட்களுமாக தேர்தலை நடத்தவிடாமல் தடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தேர்தலை எதிர்கொள்ளும் அச்சத்தினால் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை வழங்காமல் தேர்தல் ஆணைக்குழுவிற்கும் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அழுத்தங்களை பிரயோகித்தும் தேர்தலை சீர்குலைக்க முயற்சிப்பது மக்கள் பயத்திற்கே எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அவ்வாறே, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஒலிபரப்பு அதிகார சபைச் சட்டம் போன்ற சட்டங்களின் ஊடாக மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்தி மக்களை அடக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதன் கீழ், ஊடகங்களை அடக்கி, மக்கள் தங்கள் உரிமைகளுக்காக முன்நிற்கும்போது அவர்களை பயங்கரவாதிகள் என்று அழைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப் படை உரிமைகளை கூட மீறும் வகை யில் அரசாங்கம் செயற்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறு மக்களின் ஜனநாயக உரிமைகள், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் மீறப்படுவதால், இன, மத, சாதி பேதமின்றி சிவில் அமைப்புக்களும், பிரஜைகளும் இதற்கு எதிராக ஒன்றாகப் போராட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐதராபாத் வெற்றி

கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியில் 23 ரன்கள் வித்தியாசத்தில் ஐதராபாத் அணி வெற்றி பெற்றது. முதலில் களமிறங்கிய ஐதராபாத் அணி 20 ஓவர்கள் முடிவில் 229 ரன்களை கொல்கத்தா அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது. பின்னர் களமிறங்கிய கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 205 ரன்கள் எடுத்து தோல்வியடைந்தது.

## Book Designer உடனடியாக தேவை

Coreldraw & Photoshop மற்றும் Tamil Typing ல் குறைந்தது 2 அல்லது 3 வருடங்கள் அனுபவம், அச்சகத்தில் வேலை செய்த அனுபவம் உள்ளவர் உடன் தேவை. தங்கள் வீட்டிலிருந்து வேலை செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை. தங்கள் முழுவிபரங்களையும் கீழ்க்காணும் Whatsapp க்கு அனுப்பி விடவும் மேலதிக விபரங்கள் போனில் கேட்டறிந்து கொள்ளுங்கள். 15265

**WHATS APP :-0041795249585**

## முகாமையாளர் தேவை

நீரியல்சார் பண்ணை ஒன்றில் தங்கி நின்று நிர்வகிக்கக்கூடிய முகாமையாளர் ஒருவர் வேலைக்குத் தேவை C-6362

**077 127 8122**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

- ⇨ A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
- ⇨ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ⇨ கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
- ⇨ A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

(15251)

**076 436 5814,076 739 0413**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

### கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

### 30% விலைக்கழிவில்

பான்சிப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், தையல் உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள், கவறிங் நகைகள், கிறீம் வகைகள், விளையாட்டுப் பொருட்கள், சில்வர் வகைகள், கிளாஸ் வகைகள், அலுமினியப் பொருட்கள், மாபிள் வகைகள் அனைத்துப் பொருட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



### சரவணபவன் பென்சி கவுஸ்

இல.26/1,
ஜும்மா பள்ளிவாசல் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்
தே.கலைத்தாசன்(கரன்)
T.P:- 021 315 5900, 077 468 3354 (15251)

## காணி விற்பனைக்குண்டு



யாழ்ப்பாணம் புத்தூரில் பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து ½ km தூரம் புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன் நிலப்பரப்பு 60 பரப்பு காணி குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, நன்னீர் ஊற்று நிலப்பரப்பு, 3, 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.


(15250)

தொடர்பு:-

**0770760389**

**076 911 9371**

**076 739 0413**




(காபற் மெயின் றோட்டுடனே முழு காணியும் உள்ளது)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில்
5 பரப்பு 13.72 குளி காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 2 பரப்பில் 2 துண்டும் 1 பரப்பு 13.72 குளி காணி துண்டுகள் மட்டுமே உள்ளன.




**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி முதல்
மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு: ஜெயம் (15263)

**077 814 7389, 077 986 5457**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் (நிலப்பரப்பு)
24பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பரப்பின் விலை (125,000/=) ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.
- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி

(15251)

**076 755 8606**

**077 638 5683**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15251)

**076 733 6047**

**076 333 6079**

**076 733 6093**

## English Classes

### Gr 1 to O/L

தனி மற்றும் குழு வகுப்புகள்

Let's Learn

- Grammar
- School syllabus
- Spoken
- Writing skills
- Monthly exams

(15237)

வீடு வந்து கற்பிக்கப்படும். 077 331 4608 (யாழ்ப்பாணம்)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 1987ம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை. மீனராசி உத்திரட்டாதி நட்சத்திரம் 15235

**076 060 6232**

**071 658 7658**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.